# இலங்கையில் வன்முறைத் தீவிரவாதத்தை தடுப்பதற்கான கொள்கைப் பரிந்துரைகள்

இலங்கையில் பல்கலைக்கழக பட்டதாரி மாணவர்களுடன் மேற்கொண்ட கலந்துரையாடல்களின் அடிப்படையில் தொகுக்கப்பட்டது

மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம்

# இலங்கையில் வன்முறைத் தீவிரவாதத்தை தடுப்பதற்கான கொள்கைப் பரிந்துரைகள்

இலங்கையில் பல்கலைக்கழக பட்டதாரி மாணவர்களுடன்
மேற்கொண்ட கலந்துரையாடல்களின் அடிப்படையில் தொகுக்கப்பட்டது

25 YEARS
1996 - 2021
CENTRE FOR POLICY ALTERNATIVES

மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம்

2021 மே

**இலங்கையில் வன்முறைத் தீவிரவாதத்தை தடுப்பதற்கான கொள்கைப் பரிந்துரைகள்**

முதற் பதிப்பு : **ஆகஸ்ட் 2021**

ISBN : 978-624-5914-05-0

பக்க வடிவமைப்பு : **வாக்யா ரூ**

வெளியீடு : **மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம்**

மாற்றுக்கொள்கைகளுக்கான நிலையம் என்பது சுயாதீன, அரசியல் கட்சி பேதமற்ற அமைப்பாகும். அது பிரதானமாக ஆட்சி முரண்பாடுகளைத் தீர்த்தல் மற்றும் அதனுடன் இணைந்த பிரச்சினைகள் மீது அவதானம் செலுத்தும். பொது மக்களின் கொள்கை தொடர்பான சம்பாஷனைக்கு சிவில் சமூகத்தின் நேரடி ஒத்துழைப்பு தேவைப்படுவதாலும், அதைப் பலப்படுத்த வேண்டும் என்பது தொடர்பாக மிகுந்த நம்பிக்கை காரணமாகவும், 1996 இல் மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் அமைக்கப்பட்டது. பொது மக்கள் மீதான கொள்கைகள் விமர்சன ரீதியாகத் திறனாய்வு செய்யப்படல், மாற்று வழிகளை இனங்காணல், அதை விரிவாக்கல் தொடர்பான ஆய்வு, அழுத்தம் கொடுக்கும் நிகழ்ச்சித்திட்டங்கள் என்பவற்றிற்கு மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் தன்னை அர்ப்பணித்துள்ளது.

முகவரி : 6/5, லெயாட்ஸ் வீதி, கொழும்பு-05, இலங்கை
தொலைபேசி : +9411 2081384, +94112081385, +94112081386
ஃபக்ஸ் : +9411 2081388
இணையதளம் : www.cpalanka.org
மின்னஞ்சல் : info@cpalanka.org
ஃபேஸ் புக் : www.facebook.com/cpasl
டுவிட்டர் : @cpasl

# உள்ளடக்கம்


| | | |
|---|---|---|
| முன்னுரை | | 5 |
| கலந்துரையாடல் பத்திரம் பற்றிய சுருக்கமான மீளாய்வு | | 7 |
| கலந்துரையாடல் பத்திரம் பற்றிய முக வாசகம் | | 9 |
| கலந்துரையாடல் பத்திரம் பற்றிய விசேடக் குறிப்பு | | 13 |
| கலந்துரையாடல் பத்திரம் பற்றிய அறிமுகம் | | 15 |
| 1. | நிறைவேற்றுச் சாராம்சம் | 17 |
| | 1.1. வன்முறைத் தீவிரவாதத்தின் தள்ளுகை மற்றும் கவர்தல் காரணிகள் | 17 |
| | 1.2 முக்கிய பரிந்துரைகளின் சாராம்சம் | 20 |
| 2. | அறிமுகம் | 25 |
| 3. | கலந்துரையாடலின் குறிக்கோள்கள் | 27 |
| 4. | பயன்படுத்திய முறைமை | 29 |
| 5. | அடிப்படைப் பிரச்சனைகள், சட்ட நிலைமைகள் மற்றும் பரிந்துரைகள் | 33 |
| 6. | முடிவுகள் | 47 |

# முன்னுரை

குறிப்பாக இளைஞர்களிடையே வன்முறைத் தீவிரவாதம் உலகம் பூராவும் தொடர்ச்சியாக இடம்பெற்று வருகிறது. அதே சமயம் அதனோடு தொடர்ச்சியாக மரணங்களையும் அழிவுகளையும் கொண்டு வரும் சமூக - அரசியல், கலாசார மற்றும் பொருளாதார கட்டமைப்பை அழித்தொழிப்பதும் உண்மையாகும். இலங்கையின் நிலைமை இதற்கு புதியதல்ல. குறைந்த பட்சம் 1970 களிலிருந்து வடக்கிலும் தெற்கிலும் வன்முறைக் கிளர்ச்சிகள் இடம்பெற்றன. இதன் மூலம் இலங்கை மக்கள் மத்தியில் சமாதானத்திற்கும் நல்லிணக்கத்திற்கும் ஒரு அவசர தேவை தோன்றியுள்ளமையை காணக்கூடியதாகவுள்ளது.

இவை அனைத்திலிருந்தும் ஒரு விடயம் புலனாகிறது. தமது கருத்துக்களுக்கு செவிசாய்க்காத, தம்மைக் கவனிக்காத, பொதுமக்களின் கொள்கை வகுப்பிற்கான கலந்துரையாடலின் போது தம்மையும் பங்காளர்களாக இணைத்துக் கொள்ளவேண்டும், என்ற தேவை இருக்கத் தக்கதாக அவ்வாறு இடம்பெறாமை காரணமாக இளைஞர்கள் நம்பிக்கை இழந்துள்ளனர். எமது தேசத்து இளைஞர்கள் புறக்கணிப்பிற்கும், வேர்களை இழந்த நிலைமைக்கும் அஞ்சி, இச்சமூக முறைமை மீது நம்பிக்கை இழந்து செயற்படும் ஒரு சூழ்நிலை உருவாகியுள்ளது. இந்நிலைமைக்கு உடனடியான தீர்வுகளை காண முடியாவிட்டால் தொடர்ச்சியாக அமைதியற்ற ஒரு நாட்டிலேயே நாம் வாழ நேரிடும்.

இப்பிரச்சினை தொடர்பாக ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் (UNDP) கவனயீர்ப்பு மீது மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையமும் கரிசனை கொண்டது. அதே சமயம் எமது இளைஞர் யுவதிகள் மத்தியிலிருந்து திரட்டப்பட்ட கருத்துக்களையும் கருத்தியலையும் நாம் ஆழமாக கவனிக்க வேண்டியுள்ளது. அவற்றை நாம் பொருட்படுத்தாமல் கை நழுவிவிடக் கூடாது. இக் கருத்துக்கள் மீது நாம் ஆழமாகக் கவனம் செலுத்த வேண்டியுள்ளது, இதன் மூலமே நாம் எதிர்பார்க்கும் அமைதியையும் நல்லிணக்கத்தையும் சுபீட்சத்தையும் இலங்கையில் ஏற்படுத்த முடியும் என உறுதியாக நம்புகின்றோம்.

**கலாநிதி பாக்கியசோதி சரவணமுத்து**
நிறைவேற்றுப் பணிப்பாளர்
மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம்.

# கலந்துரையாடல் பத்திரம் பற்றிய சுருக்கமான மீளாய்வு

சர்வதேச மனித உரிமைகள் பிரகடனம் மற்றும் ஏனைய சர்வதேச மனித உரிமைகள் பற்றிய சமவாயங்கள் வரையுள்ள கோட்பாடுகள் நெறிமுறைகள் என்பவற்றின் கீழ் மேற்கொள்ள வேண்டிய அர்ப்பணிப்பும் கடப்பாடும் வன்முறைத் தீவிரவாதங்களைத் தடுப்பதாக அமையும். இலங்கையைப் பொறுத்தவரை, வன்முறைத் தீவிர வாதத்தை தடுப்பதற்கான நடவடிக்கைகளை நீடித்து நிலைக்கக் கூடிய வகையில் அமைப்பதாயின், வெறுமனே கொள்கைகள், சட்டங்கள் மற்றும் உபாயமார்க்கங்கள் மாத்திரம் போதாது. அவை உரிய முறையில் உச்ச மட்டத்தில் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். அவற்றிற்கு ஏற்புடைய பிரயோக ரீதியான பரிந்துரைகளைத் தயாரிப்பதும் அவசியமாகும். வன்முறைத் தீவிரவாதத்தை தடுப்பதற்கான நடைமுறை ரீதியான பரிந்துரைகளைத் தயாரிப்பதற்கு முன்னுரிமை வழங்கப்பட வேண்டும். அதே சமயம் நாட்டின் பன்மைத்துவ பல்வகைமை கொண்ட சமூகத்தின் பண்புகள் மீது நிரந்தரமான அத்திவாரம் இடப்பட வேண்டும்.

இலங்கையில் ஏற்கனவே, சமாதானம் நல்லிணக்கம் என்பவற்றை மேம்படுத்தி வன்முறைத் தீவிரவாதத்தை தடுப்பதற்கான கொள்கைகளையும் நிகழ்ச்சித் திட்டங்களையும் கொண்ட பல நடவடிக்கைகள் உண்டு. அதே சமயம் பல்வகைமை கொண்ட வன்முறைத் தீவிரவாத நிலைமைகளையிட்டு பரிந்துரைப்பதற்கு கடந்த காலத்தில் பல ஆணைக்குழுக்கள் நியமிக்கப்பட்டன. ஆனால், குறுகிய அரசியல் தேவைகள், மேற்படிக் கொள்கைகளை உள்ளடக்கிய நடவடிக்கைகளின்போது சாதகமாக அமையவில்லை. அவற்றுள் சில, நடைமுறையிலுள்ள சமூக யதார்த்தங்களை உரிய முறையில் அணுகத் தவறிவிட்டன. பல்வேறு காரணங்களின் நிமித்தம் அவை முழுமையாக செயற்படுத்தப்படுவதில்லை. நிகழ்காலத்தில் காணக்கூடியவாறு, உண்மையிலேயே இலங்கையும் அதன் முக்கிய சக்திகளும் முக்கியமான பன்மைத்துவ இயல்பின் அழிவிற்குக் காரணமாக அமைந்தன. வன்முறைத் தீவிரவாதத்தை தடுப்பதற்கு நடைமுறைப்படுத்தக்கூடிய பிரயோக ரீதியான கொள்கைகளையும் வழிமுறைகளையும் முன்வைக்கும் அவசியம் இதன் மூலம் உறுதிப்படுத்தப்படுகின்றது.

மாற்றுக்கொள்கைகளுக்கான நிலையத்தின் மூலம் தயாரிக்கப்பட்ட கொள்கைப் பரிந்துரைகளால் உள்ளடக்கப்பட்ட இவ் ஆவணம் கொள்கைகள் மற்றும் சட்ட ரீதியான சீர்திருத்தங்கள் ஊடாக வன்முறைத் தீவிரவாதத்திற்கு எதிராகப் போராடுவதற்கான நடவடிக்கைகளுக்கு ஒரு வழிகாட்டியாக அமைந்துள்ளது. அதே சமயம் போருக்குப் பின்னரான பின்னணியின் கீழ் இது மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது. கொள்கைகள் தொடர்ச்சியாக வெறுமனே கொள்கைகளாக அமையுமாயின், மேற்படி கொள்கைகள் மூலம் எதிர்பார்த்த பெறுபேறுகளை நாம் அடைய முடியாது. எனவே அவற்றை செயற்படுத்தக்கூடிய உத்தேசக் கொள்கைகள் மீது அர்த்தபுஷ்டியுள்ள தாக்கத்தை ஏற்படுத்துவதற்கு அது தீர்மானகரமான காரணியாக அமைய வேண்டும். இதன்படி கொள்கைத் தீர்மானங்களை நடைமுறைப்படுத்தாமையும் கொள்கைகள் தோல்வி கண்டமையும், இலங்கையில் கொள்கைகள் சம்பந்தமான கருத்தாடலின் போது பிரதிபலிக்கக் கூடிய காரணிகளாக அமைந்துள்ளன.

**கலாநிதி ராமசாமி ரமேஸ்**
சிரேஷ்ட விரிவுரையாளர்
அரச அறிவியல் துறை
பேராதனைப் பல்கலைக்கழகம்

## கலந்துரையாடல் பத்திரம் பற்றிய முக வாசகம்

# இலங்கையில் வன்முறைத் தீவிரவாதத்தை விழிப்பதற்கு பயனுறுதிவாய்ந்த சமூகக் கொள்கைகளின் போக்கு

### வன்முறைத் தீவிரவாதம் என்பது என்ன?

வன்முறைத் தீவிரவாதம் என்பது செப்ரெம்பர் 11ஆம் திகதி சம்பவங்களின் பின்னணியிலிருந்து பகுப்பாய்வாளர்கள் மற்றும் அபிவிருத்திக்கான பிரதிநிதித்துவ அமைப்புக்களுக்குமிடையே பூகோள ரீதியாக ஜனரஞ்சகமடைந்த ஒரு சொற்தொகுதியாகும். இதற்கான முக்கிய காரணி ஐக்கிய அமெரிக்காவின், அடிப்படை பாதுகாப்புத் தொலைநோக்குடன் விழிப்புணர்வு கொண்ட "பயங்கரவாதத்திற்கு எதிரான யுத்தம்" ஆகும். இது பிரச்சினையின் வேரூன்றிய காரணிகளுக்கு சிகிச்சையளிக்கும் போது தோல்வி கண்டுள்ளது. பயங்கரவாதத்திற்கு எதிராக பாதுகாப்புச் செயற்பாடுகளின் வழிமுறைகள் மூலம் மாத்திரம் வன்முறைத் தீவிரவாதத்தின் பாரிய பிரச்சினைகளுக்கு தீர்வு காண முடியாது என்பது மேன்மேலும் புரிந்துகொள்ளப்பட்டது. பயங்கரவாதமும் வன்முறைத் தீவிரவாதமும் சில வேளைகளில் இலக்கிய ரீதியாக ஒன்றையொன்று சுட்டிக்காட்டும் வகையில் பயன்படுத்தப்பட்டாலும், வன்முறைத் தீவிரவாதம் என்பது பகுப்பாய்வு ரீதியில் உசிதமான முறையிலும் அரசியல் ரீதியாகவும் மிகச் சிறப்பான முறையிலும் சரியான வழிமுறைகளிலும் ஆராயப்பட வேண்டும். அதன் மூலம் மாத்திரமே வன்முறைக்குக் காரணமான ஊக்குவிப்புகளை அடையாளம் காண முடியும். வன்முறைத் தீவிரவாதத்தின் கீழ் இயங்கும் காரணிகளை இல்லாதொழிப்பதற்கான திட்டங்கள் மீது வெறுமனே கோரிக்கை விடுப்பது மூலம் மாத்திரம் வெற்றிகாண முடியாது. தற்போது அது சமயரீதியான அரசியல் ரீதியான அல்லது வேறு எந்த விடயத்தையும் மையமாகக் கொண்டு செயற்பட முடியும். ஒரு வகையிலான அல்லது வேறு ஏதோவொரு வகையிலான தீவிரவாதத்துடன் தொடர்புடைய அனைத்து வகையான வன்முறைகளை உள்ளடக்கக்கூடிய வகையில் பரந்துபட்ட அர்த்தத்தில் அது பயன்படுத்தப்பட்டாலும், இஸ்லாம் தீவிரவாதத்துடன் ஏற்படக்கூடிய வன்முறையுடன் தீவிரவாதத்தோடு பாரம்பரிய ரீதியான தொடர்புகளும் உண்டு.

சமூக விஞ்ஞானத்தில் வேறு பல சொற்பதங்கள் பயன்படுத்தப்பட்டாலும், வன்முறைத் தீவிரவாதம் என்பது தொடர்பாக திட்டவட்டமான அங்கீகரிக்கப்பட்ட வரைவிலக்கணம் கிடையாது. உண்மையில் மிகப் பரந்துபட்ட முறையில் பயன்படுத்தப்படும் வரைவிலக்கணத்தை (USAID) ஒரு முன்மொழிவு மூலம் வரைவிலக்கணம் செய்துள்ளது. "சமூக, அரசியல் பொருளாதார குறிக்கோள்களை முன்னெடுத்துச் செல்வதற்காக, வன்முறைக்கான ஆதரித்துவாதாடல் இதன்போது ஈடுபடுத்துதல், தயாராதல் அல்லது அவ்வாறின்றி கருத்தியல் ரீதியாக ஊக்குவித்தல் அல்லது நியாயப்படுத்துவதற்கு அல்லது உதவி செய்வதற்கு ஒத்துழைப்பு நல்குவதாகும். (USAID2011)" வேறு வகையில் கூறுவதாயின் வன்முறையின் பிரதான பாத்திரங்களின் தொலைநோக்கு முன்னே வன்முறையை நியாயப்படுத்துவது ஆகும். அதற்குக் காரணம் பிரதான பாத்திரங்களில் ஒரு சில சமூக, அரசியல் பொருளாதார குறிக்கோள்களை அடைவதற்கு உள்ள ஒரே மார்க்கம் வன்முறையாகும் என நியாயப்படுத்தும் கடும் போக்காளர்கள் இருக்கலாம். அவர்கள் எரியும் நெருப்பில் குளிர்காய்பவர்கள் ஆவர். தீவிரவாதம் என ஒரு சிலருக்கு தோற்றும் விடயங்கள் ஏனையோருக்கும் தீவிரவாதமாகும் எனத் தோற்றாமல் இருப்பது தீவிரவாதத்தை எவ்வாறு வெளிப்படுத்த முடியும் ? இது உண்மையிலேயே பல கேள்விகளை முன்நிலைப்படுத்துகின்றன. இச்சூழமைவின் கீழ் வன்முறைத்தீவிரவாதத்தில் இருக்கக் கூடிய இரண்டு பண்புகள் அடையாளம் காணப்பட்டுள்ளன.

1. தாம் சார்ந்த குழுக்களின் உன்னதத் தன்மையை மேன்மேலும் வலியுறுத்துதல். அது எதிர்நோக்கும் சவால்களுடன் செயற்படுதல்.

2. பன்மைத்துவம் மற்றும் அனைவரையும் அரவணைத்து உள்வாங்கிய ஒரு சமூகம் பற்றிய எண்ணக்கருவிற்கு எதிர்ப்புத் தெரிவித்தல் ஆகும். வன்முறைத் தீவிரவாதத்தின் இந்த அத்தியாவசியமான பண்புகள் மூலம் பன்மைத்துவத்தை ஏற்றுக்கொள்ளுதல் மற்றும் சர்வதேச மனித உரிமைகள் போன்ற ஜனநாயக ரீதியான கோட்பாடுகளை அதன் உடைந்துபோகும் தன்மையை அது எடுத்தியம்புகின்றது.

3. அனைத்து தீவிரவாதங்களும் அத்தியாவசியமாக வன்முறையை ஏற்படுத்தமாட்டாது. அனைத்து வன்முறைகளும் தீவிரவாதத்துடன் தொடர்புகொண்டிருக்க மாட்டாது. எவ்வாறாயினும் (Schimid) 2014ம் ஆண்டில் பின்வருமாறு எடுத்துரைக்கிறார். இஸ்லாமிய சமூகங்களில் ஜனநாயகத்தை மேம்படுத்தும் கண்ணோட்டத்தில் நோக்கும்போது வன்முறையற்ற இஸ்லாமிய தீவிரவாதத்துடன் உறவு வைத்திருத்தலை விட, வன்முறை இஸ்லாமிய தீவிரவாதத்துடன் தொடர்புகொள்வது தீங்கானது என்பதாகும். மறுபுறம் போதை வஸ்துக்கள் ஸ்தாபன ரீதியாக குற்றச் செயல்களுடன் தொடர்புகொண்ட வன்முறை பொதுவாக மேற்கூறிய எந்தவொரு தீவிரவாத கருத்தையும் ஏற்படுத்தமாட்டாது. நாம் வன்முறைத் தீவிரவாதம் என்ற சொற்பதங்களை பயன்படுத்துகையில் தமது கருத்தியலிலோ அல்லது நம்பிக்கைகளையோ அடிப்படையாகக் கொண்டு தமது வாழ்க்கையை அர்ப்பணிப்பதற்கு தயார் நிலையிலுள்ள, தியாக மனப்பான்மையுடன் கூடிய கடும்போக்காளர்கள் முன்நிலைப்படுத்தும் நபர்களை உருவாக்குகிறது. ஒன்றிலிருந்து மற்றுமொன்றை நியாயப்படுத்தும், வன்முறைகள் மற்றும் தீவிரவாத கருத்தியல் பற்றி பொருள்கோடல் செய்வது பற்றி நாம் புரிந்துகொள்ள முடியும்.

வன்முறைத் தீவிரவாதம் என்ற எண்ணக்கரு தொடர்பாக பல்வேறு கருத்துக்கள் உண்டு. இந்த வன்முறையை நீடித்து நிலைக்கக்கூடிய வகையில் நிர்வகிப்பதற்கு பயங்கரவாதத்திற்கு எதிரான யுத்தம் தோல்வி கண்ட நிலையில் இயலக்கூடிய உள்ளார்ந்த உறவுகளை மேம்படுத்தி உலகிலுள்ள பன்முகப்படுத்தப்பட்ட வன்முறைத் தீவிரவாதம் தொடர்ந்து நிலவும் வகையில் இந்த எண்ணக்கரு மூலம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

## வன்முறைத் தீவிரவாதம் தொடர்பான இலங்கை வரலாறு

இச்சொற்றொடரின் சம கால பிரயோகத்திற்கு முன்னர் இலங்கைக்கு வன்முறைத் தீவிரவாத அனுபவங்கள் உண்டு. சுதந்திரத்திற்குப் பின்னரான இலங்கையில் ஸ்தாபன ரீதியாக அணி திரட்டப்பட்ட வன்முறைத் தீவிரவாதத்தின் முதற் சம்பவம் 1971 இன் ஜே.வி.பி எழுச்சி சுட்டிக்காட்டியது. பெரும்பாலும் சிங்கள சமூகத்தின் கிளர்ச்சிகர இளைஞர் அணியின் அரச எதிர்ப்பு வன்முறை, மாக்சிசம், காலனித்துவம், வர்க்கப் போராட்டம் மற்றும் தேசப்பற்று குறிப்பாக அவற்றைப் புரிந்துகொள்கையில், அவர்களுடைய தொலைநோக்கிற்கு அமைய நியாயப்படுத்தப்பட்ட இவ்விடயம் கடந்த பகுதியில் அர்த்தப்படுத்தப்பட்ட வகையில் தெட்டத் தெளிவாக வன்முறைத் தீவிரவாதத்தின் சந்தர்ப்பங்களாகும். அன்று ஆட்சி அதிகாரத்தில் இருந்த இடதுசாரிப் போக்குடைய அரசு மேற்படி இயக்கத்தை எதுவிதமான தயவு தாட்சண்யமும் இன்றி ஒடுக்கியது. இந்த எழுச்சிக்குக் காரணமாக அமைந்தது என்ன ? எதிர்காலத்தில் நடைபெறாமல் இருப்பதற்கு என்ன செய்ய வேண்டும்? என்பது பற்றி எந்த வகையிலும் பாரதூரமான கவனம் செலுத்தப்படவில்லை. அதன் விளைவாக இரண்டு தசாப்தங்கள் கடக்கும் போது அரசியல் மற்றும் சமூக இருப்பு பாரிய அளவில் அழிவுக்குட்பட்டது. முதலாவது கிளர்ச்சியை ஒத்த கருத்தியல் கொண்ட அதிருப்தியுற்ற சிங்கள இளைஞர்கள் அணி இரண்டாவது கிளர்ச்சியை 1987 இலிருந்து ஆரம்பித்தனர். அரசுக்கு எதிராக தேசப்பற்றை முன்நிலைப்படுத்தி வன்முறை நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கு அழைப்பு விடுத்தனர். இதன்போது கிளர்ச்சிக்காரர்கள் இந்திய தேசிய விஸ்தரிப்பு வாதம் என்ற காரணியையும் முன்வைத்து, இந்திய சமாதானப் படைகள் இங்கு தங்கியிருப்பதற்கு கடும் எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டது. இச்சந்தர்ப்பத்தின்போது வலதுசாரி சுபாவமுடைய ஆட்சியாளர்கள் நெறிப்படுத்திய அரசு ஜே.வீ.பி இனரை கடந்த முறையை விட கடுமையாகவும் குரூரமாகவும் வன்முறை மூலம் அடக்கி ஒடுக்கி நசுக்கியது. இச் சந்தர்ப்பத்தின்போது இளைஞர்களுக்கான தேசிய ஆணைக்குழு நியமனம் பெற்றது. சில கொள்கைகள் தொடர்பான பரிந்துரைகளை அமுல்படுத்துவதன் மூலம் இளைஞர்களின் கிளர்ச்சிக்கு ஏதுவான காரணிகளை அடையாளம் காண்பதற்கு அரசு முயற்சித்தது. எவ்வாறாயினும் தேசிய இளைஞர் ஆணைக்குழு ஆதரித்து வாதாடிய கொள்கைகள் கட்டம் கட்டமாகவே அமுலாக்கப்பட்டது. இது தொடர்ச்சியான கண்காணிப்பு இன்றி மாற்றமடையும் நிலைமைகளை ஆழமாக மீளாய்வு செய்யாமல் அமுலாக்கப்பட்டது.

1980களில் இருந்து அமுலாக்கப்பட்ட விடுதலைப்புலிகளின் எழுச்சி இலங்கையின் வடக்கு கிழக்கு மாகாணங்களிலேயே தமிழ் இளைஞர்களால் ஆரம்பிக்கப்பட்டது. தமிழ் ஈழம் என்ற கருத்தியலை மையமாகக் கொண்டு தமிழர்களின் தேசிய விடுதலை பற்றிய கருத்தியலின் படி, தமிழ் இளைஞர்கள் ஆயுதபாணிகளாக பயிற்றப்பட்டனர். நெறிப்படுத்தப்பட்டாலும் அவர்கள் ஆயுதபாணிகளாக்கப்பட்டனர். இந்த அர்த்தத்தில் நோக்கினால், அதுவும் வன்முறைத் தீவிரவாதமாகும். ஆக்கிரமிப்புப் படையாக சகல சிறுபான்மையினரையும் புறக்கணிக்கும் சிங்கள பௌத்த கருத்தியல் உருவாக்கப்பட்டு அது ஒரு பாரிய மேலாதிக்க கட்டமைப்பாக அடையாளம் காணப்பட்டது. இவ்வாறு இலங்கை அரசுக்கு எதிராக வன்முறை நியாயப்படுத்தப்பட்டது. உயிர்த் தியாகம் செய்த இளைஞர் சமூகம் என்ற கருத்தியல் மேலோங்கியது. மறுபுறம் ஆயுதபாணிகளான தமிழ் இளைஞர்கள் அலை அலையாக செயற்படுத்திய விடயங்கள் ஏனைய பல இனங்களை தமது பிரதேசங்களில் இருந்து அகற்றும் நடவடிக்கைகள் மேலோங்கின. முஸ்லிம் மற்றும் சிங்கள சமூகங்களைச் சார்ந்தவர்கள் இப்பிரதேசங்களில் (வடக்கு கிழக்கு) இருந்து வெளியேற்றப்பட்டனர். தமிழ் அரசு பற்றி விடுதலைப் புலிகளிடம் ஒரு மேலாதிக்கக் கருத்து வேரூன்றி இருந்தது. தென்னிலங்கையின் இரண்டு ஜே.வீ.பி கிளர்ச்சிகளை ஒடுக்குவதன் மூலம் கற்றுக்கொண்ட பாடங்களை அரசு நடைமுறைப்படுத்தியது. விடுதலைப் புலிகளுடன் போராடுவதற்கு சிங்களப் படைவீரர்கள் ஆட்சேர்க்கப்பட்டனர். அவர்களைப் பயிற்றுவிப்பதற்கும் விடுதலைப் புலிகளுடன் போராடுவதற்கும் இப்படையினர் நெறிப்படுத்தப்பட்டனர். இதன் பொருட்டு சிங்கள தேசத்தின் தொடர்ச்சியை முன்னெடுப்பதற்கும் பாதுகாப்பதற்கும் சிங்கள பௌத்த கருத்தியலைப் பயன்படுத்தி இறுதிக் கட்டத்தில் விடுதலைப் புலிகளை கொடூரமாக இல்லாதொழிப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. சிங்கள அரசு இதனை நியாயப்படுத்தினாலும் சுதந்திரச் சிந்தனையாளர்கள், விடுதலைப் புலிகளின் கருத்தியலை ஆதரித்தவர்களும் சர்வதேச சமூகத்தின் பல்வேறு பிரிவினரும் இவ்வொடுக்கு முறையை கடுமையாகக் கண்டித்தனர். நீண்டகாலமாக அரசு கைதுசெய்திருந்த விடுதலைப்புலி போராளிகளுக்கு புனர்வாழ்வு வழங்கும் நிகழ்ச்சித்திட்டத்தை அரசு செயற்படுத்தியது. ஆனால், அனேகமான அவதானிப்பாளர்களும் கற்ற பாடங்களும் நல்லிணக்கமும் பற்றிய ஆணைக்குழு போன்ற இலங்கை அரசினால் நியமிக்கப்பட்ட உத்தியோகபூர்வ விசாரணை ஆணைக்குழுக்கள் பரிந்துரைத்த விடயங்கள் உரிய முறையில் நடைமுறைப்படுத்தப் படவில்லை. யுத்தத்திற்குப் பின்னரான இலங்கையில் நல்லிணக்கத்தையும் சமாதானத்தையும் கட்டியெழுப்புவதற்கான நிகழ்ச்சித் திட்டத்தை நேர்மையாகச் செயற்படுத்துவதற்கு இலங்கை அரசு எதுவித முயற்சியையும் மேற்கொள்ளவில்லை. இச் சூழமைவின் கீழ் வன்முறைத் தீவிரவாதம் என்ற எண்ணக்கருவின் மூலம் அரசசார்பற்ற அமைப்புக்களின் செயற்பாட்டாளர்களால் அரசுக்கு எதிராக மேற்கொள்ளப்படும் ஸ்தாபன ரீதியான கருத்தியலை முன்நிலைப்படுத்தும் வன்முறையை மாத்திரம் கவனத்தில் எடுக்கும் மேலாதிக்கம் கொண்டோரை புறக்கணிக்கும் கருத்தியலையும் அதனோடு தொடர்புகொண்ட தேசிய பாதுகாப்புச் சட்டகத்தைப் பயன்படுத்தி வடக்கிலும் தெற்கிலும் செயற்படும் கிளர்ச்சியாளர்களை இலக்கு வைத்த அரசு செயற்படுத்தும் வன்முறையை புறக்கணித்தமையால், அதுவரை அது குற்றங்களை தவறுகளைக் கொண்டதாக இருக்கும். எவ்வாறாயினும், நடைமுறையிலுள்ள ஒரு சூழமைவின் கீழ் அரசு மேற்படி வன்முறையை எவ்வாறு பயன்படுத்துவது ? யாருக்கு எதிராகப் பயன்படுத்துவது? என்பதை கருத்திற்கொள்ளாது அரசு வன்முறையின் ஏகபோக அதிகாரத்தைக் கொண்டுள்ளது என்ற கருத்து நிலை காரணமாக இதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கலாம்.

மேற்படி பந்தியின் மூலம் எடுத்துக் கூறப்பட்ட மீளாய்வின் போது இடம்பெற்ற அரச எதிர்ப்பு மூன்று கிளர்ச்சிகளின் சில பொதுப் பண்புகளை காணக்கூடியதாக உள்ளது.

**முதலாவதாக** இம் மூன்று அம்சங்களும் ஏற்கனவே நடைமுறையிலுள்ள கல்வி முறைமை அரச மற்றும் தனியார் துறை ஆட்சேர்ப்பின் போது அனுசரிக்கப்படும் கொள்கைகள், ஆளுகை முறைமை மற்றும் சமூக முறைமையிலும் அரசியலிலும் காணப்படும் அநீதியான நடைமுறை காரணமாக எதிர்காலத்தை நோக்க முடியாத, முழுமையான மற்றும் பகுதி நேர வேலை வாய்ப்பு அல்லது தொழில் வாய்ப்பின்மை போன்ற காரணங்களினால், வழிநடத்தப்பட்ட விடயங்கள் இரண்டு இளைஞர் கிளர்ச்சிகளுக்கு ஏதுவாக அமைந்தது. ஏற்கெனவே நடைமுறையிலுள்ள கல்வி முறைமை, அரசாங்கம் அமுல்படுத்திய பரீட்சை முறைமைகளைப் போலவே இதுவும் ஏட்டுச் சுரைக்காயாகவே அமைந்த பல்கலைக்கழக பட்டதாரி அபேட்சகர்களுடன் நடத்தப்பட்ட ஆலோசணைக் கலந்துரையாடல்கள் மூலமும் இது பிரதான காரணியாக எடுத்துக் கூறப்பட்டது.

**இரண்டாவதாக** அர்ப்பணிப்புடன் கூடிய இளைஞர்களை அடையாளம் காண்பதற்கும் ஆட்சேர்ப்பிற்கும் கிளர்ச்சிக் குழுவினர் பல்வேறு உபாயங்களைக் கையாண்டனர். இதன்பொருட்டு சமூக, வர்க்க, இனத்துவ,

சாதிய, பால்நிலை மற்றும் விடுதலைப் புலிகளின் அமைப்பு ஆகிய இரண்டினதும் அளவுகோள்கள் உபாயமார்க்க ரீதியில் உள்ளடக்கப்படும். இயல்பாக இங்கு காணப்படுகிறது. இதனால் விடுதலை சார் கருத்தியல்கள் வளர்ச்சியடைந்தன. ஜே.வி.பி யின் இரண்டு எழுச்சிகளின் போது விடுதலைப் புலி உறுப்பினர்களின் வயது மற்றும் பாலியல் பாகுபாடு பற்றிய தரவுகள் இல்லாதுவிடில், இந்த இயக்கங்களின் அடிப்படைப் பகுதிகள் 15 முதல் 35 வயதெல்லையைக் கொண்ட திருமணமாகாத பிரிவினராகவே இருந்தனர். இந்த அனைத்து அமைப்புக்களிலும் யுவதிகளும் ஆட்சேர்க்கப்பட்டனர். அவர்களின் எண்ணிக்கையும் செயற்பாட்டு ரீதியான பங்கேற்பும் ஒன்றுக்கு பின் ஒன்றாக ஏற்பட்ட சகல கிளர்ச்சிகளின் போதும் வளர்ச்சியடைந்தன.

**மூன்றாவதாக** ஆட்சேர்க்கப்பட்டோரின் குடும்பங்களில் இருந்தும், பாரிய சமூகத்தின் சமமானோர் அணிகளில் இருந்தும் பிரித்து வைக்கப்பட்டனர். சமூகத்திற்கு வெளியே சமூகப் பெறுமானங்கள், கருத்துக்கள் மற்றும் சுதந்திரமான தொலைநோக்குடன் முழு நேரப் படையாகவே இவர்கள் அமைப்பு ரீதியாக ஸ்தாபிக்கப்பட்டனர். ஏர்வின் கொஸ்மான் (Ervin Gosmaan) இந்தக் கூற்று கூறப்பட்ட அர்த்தத்தில் இந்த அமைப்புக்களின் ஒட்டுமொத்த நிறுவனங்கள் (institutions) ஒட்டுமொத்த நிறுவனங்களாக அமைந்ததோடு அவை, குடும்பத்தினதும் மத அமைப்புக்களினதும், கல்வி நிறுவனங்களினதும், இளைஞர் சமூகங்கள், விளையாட்டுச் செயற்பாடுகள், கலாசார நடவடிக்கைகள் மற்றும் அமைப்புக்களினதும் அழுத்தத்திற்கு உள்ளாவதை தடுத்திருந்தது. குடும்பங்களில் இருந்தும் சாதாரணமான குழுமங்களிலிருந்தும் வேறுபடுத்துவது மூலம் கிளர்ச்சிகரமான இயக்கங்கள் தமது அங்கத்தினர்களிடையே ஒருமுகச் சிந்தனையை மேம்படுத்துவதற்கான ஆற்றலைப் பெற்றதோடு தாம் பங்காளர்களாகிய, சரி செய்ய முடியாது எனத் தோன்றிய முறைமையிலிருந்து விடுபடுவதற்கான ஒரே மார்க்கமாக தோன்றிய வன்முறைத் தீவிரவாத நடவடிக்கைகளுக்கு அவர்களை முழுமையாக உள்ளடக்கும் ஆற்றல் கிடைத்தது.

**நான்காவதாக** இவ்வியக்கங்களுக்கு பிரதிபலிப்பைக் காட்டும் போது, அவர்கள் (அரசு பயன்படுத்திய பிரதான உபாயமார்க்கம் கிளர்ச்சிகளை ஒடுக்குவதும், ஆயுதப் போராட்டங்களை நசுக்குவதும் சட்டத்தை அமுல்படுத்துவதுமாகும். இந்த உபாயமார்க்கம் குறுகிய கால வெற்றிகளை ஈட்டித் தந்தது. இந்த ரெடிக்கல் இயக்கங்கள் மூன்றும் ஒன்றன் பின் ஒன்றாக செயற்படுத்திய சக்தி வாய்ந்த உணர்த்தல் அடக்குமுறை என்பதை தெளிவாகச் சுட்டிக்காட்டியது. வன்முறைத் தீவிரவாதத்திற்கு இது நீண்டகாலத் தீர்வாக அமைய மாட்டாது. எனவே இலங்கையின் இளைஞர்கள் மத்தியில் வன்முறை சார்ந்த தீவிரவாதத்தை ஒழித்துக் கட்டுவதற்காக அமுல்படுத்த வேண்டிய சமூகக் கொள்கைகள் பற்றி ஒட்டுமொத்தப் பிரச்சினைகளும் உள்ளடக்கும் .

இளைஞர்களின் தேவைகளுக்கு தீர்வு காண்பதற்கான சாதாரண கொள்கைகளே இந்த ஆவணத்தின் மூலம் முன்வைக்கப்பட்டது. மேற்படி கொள்கைகள் தொடர்பாக கல்வி, தொழில்வாய்ப்புக்கள், இளைஞர் விவகாரங்கள், ஆளுகை, கலாசார விவகாரங்கள் மற்றும் சமாதானம் - நல்லிணக்கம் என்பன உள்ளடக்கப்பட்டன. இளைஞர்களிடையே வன்முறைவாதம் - தீவிரவாதம் தொடர்பாக ஏற்படக்கூடிய போக்குகளைத் தடுப்பதற்கு இத்துறைகளின் பல்வேறு இடையீடுகள் அவசியப்பட்டன. வன்முறை சார்ந்த தீவிரவாதத்தை இல்லாதொழிப்பதற்கு, ஒரு கொள்கைக்கு எதிராக மற்றுமொரு கொள்கையை அடையாளம் காண்பதோ அல்லது ஆதரித்து வாதாடுவதற்கோ அவசியமான அனைத்துத் தரவுகள் இன்று எம்மிடம் இல்லை. எவ்வாறாயினும் நாட்டில் நிலவும் கொவிட் 19 தொற்றுநோய் காரணமாக மெய்நிகர் ஊடகத்தைப் பயன்படுத்தி நாட்டில் ஒரு இளைஞர் அணியுடன் மேற்கொண்ட ஆலோசனை மூலம், வன்முறைசார் மற்றுமொரு தீவிரவாதத்தின் ஓர் சந்தர்ப்பத்தை மீண்டும் ஏற்படுத்துவதை தடுப்பதற்கு, தகவல்களை விஸ்திரமான முறையில் திரட்டுவது மாத்திரம்,இளைஞர்களின் தேவைகளுக்குத் தீர்வு காண்பதற்கு போதாது. எவ்வாறாயினும், இளைஞர் மத்தியில் வன்முறை தீவிரவாதத்தை தடுப்பதற்கான சாட்சிகளை, உபாயமார்க்க ரீதியில் அபிவிருத்தியை நோக்கி ஈடுபடுத்துவது ஆரம்ப நிலையில் மேற்கொள்ளப்பட வேண்டும். இளைஞர்கள் உட்பட இது தொடர்பில் ஆர்வம் செலுத்தும் அனைத்துத் தரப்பினரிடையே ஒரு கலந்துரையாடலை ஆரம்பிப்பதற்கு சக்திவாய்ந்த ஓர் அரங்கில் இதன் மூலம் எதிர்பார்க்கப்பட முடியும்.

**பேராசிரியர் காலிங்க ரியுடர் சில்வா**
பேராதனைப் பல்கலைக்கழகம்

# கலந்துரையாடல் பத்திரம் பற்றிய விசேடக் குறிப்பு

இது வன்முறைத் தீவிரவாதம் பற்றிய தற்போதைய நிலைமைகளையும், வன்முறை தீவிரவாதத்தைத் தடுப்பதற்கு அவசியமான கொள்கை ரீதியான பரிந்துரைகள் யாவை? என்பது தொடர்பான அறிக்கையாக இது அமைந்துள்ளது. மேலும் இந்நாட்டின் இளைஞர் சமூகத்தின் ஒரு பகுதியினரைப் பிரதிநிதித்துவப்படுத்தும் பல்கலைக் கழக பட்டதாரி கல்வியியலாளர்களுடன் நடத்தப்பட்ட கலந்துரையாடலின் விளைவாக இவ் அறிக்கையை அறிமுகப்படுத்த முடியும்.

இலங்கையின் தேசிய மட்டத்திலுள்ள பல்கலைக்கழகங்களின் இளைஞர் யுவதிகளுடன் அடிப்படையில் கலந்துரையாட முதலில் திட்டமிடப்பட்டது. எவ்வாறாயினும், இக்கலந்துரையாடல் தொகுதி குறிப்பாக இவ்விடயத்தின் பேசுபொருள் மீதான தேசிய முக்கியத்துவம் கருதி, 10 பல்கலைக்கழகங்களின் கல்வியியலாளர்களுடன் பகுப்பாய்வு ரீதியான திறனாய்வின் ஊடாக சாதகமான பல முன்மொழிவுகளும் பரிந்துரைகளும் முன்வைக்கப்படக்கூடிய ஒரு சூழமைவு உருவாகியது குறித்து நாம் மகிழ்ச்சியடைகிறோம். மேற்படி கலந்துரையாடலின் விளைவாக வன்முறைத் தீவிரவாதத்தை இல்லாதொழிக்கும் நீண்டகால தேசியக் கலந்துரையாடலின் ஆரம்பமாக இதனைக் குறித்துரைக்க முடியும். இம்முயற்சி காரணமாக அமையும் என நாம் நம்புகிறோம்.

இலங்கையின் பல்கலைக்கழகம் வன்முறைத் தீவிரவாதம் போன்ற சிக்கலான பேசுபொருள் பற்றி அவர்களின் பரந்துபட்ட தொலைநோக்கு முக்கியத்துவம் வாய்ந்தது என நாம் எதுவித விவாதமுமின்றி ஏற்றுக்கொள்கிறோம். ஏனெனில், இலங்கையின் சமூக, பொருளாதார, அரசியலைப் போலவே கலாசாரத் துறையில் பிரவேசிப்பதற்கு எதிர்பார்க்கும் இலங்கையில் கொள்கைகளை உருவாக்கும் மக்கள் ஆணையைப் பெற்ற அனேகமான கொள்கை வகுப்பாளர்களினால் அடையாளம் காண முடியாத தீர்மானகரமான கொள்கை அடிப்படையிலான பல நிலைப்பாடுகளை இந்த இளைஞர்கள் முன்வைத்தனர்.

பல்கலைக்கழக இளைஞர் யுவதிகள் இலங்கையின் பல்வேறு பிரதேசங்களில் வாழ்ந்தாலும் தமது கொள்கை ரீதியான முன்மொழிவுகளை சமர்ப்பிக்கும் போது தாம் இலங்கையர் என்ற அடையாளத்துடனும் தேசிய கண்ணோட்டத்துடனும் பிரச்சினைகளை அணுகியமை மிகவும் வரவேற்க வேண்டியுள்ளது.

எனவே, உள்ளடக்கப்பட்டுள்ள கருத்துக்களையும் முன்மொழிவுகளையும் யதார்த்த ரீதியாக நோக்குமாறு, கொள்கை வகுப்பாளர்கள், தீர்மானங்களை மேற்கொள்ளும் அதிகாரிகளைப் போலவே கல்வியியலாளர்களிடமும் நாம் வேண்டுகிறோம். இலங்கையின் இளைஞர் சமூகம் தீர்மானங்களை மேற்கொள்ளும் மட்டத்திலான நடவடிக்கைகளில் உயிரோட்டத்துடன் பங்களிப்புச் செய்ய வேண்டும் எனவும் நாம் அவர்களை வேண்டுகின்றோம்.

இக்கடமையை மேற்கொள்ளும் போது, ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் மூலம் கிடைத்த ஒத்துழைப்பைப் பெரிதும் பாராட்டுகிறோம். அவர்களுடைய பங்களிப்பிற்கும் கருத்துக்களிற்கும் எமது நன்றியைத் தெரிவிக்க விரும்புகின்றோம். இக்கற்கையை அமுல்படுத்துகையில் கருத்துத் தெரிவிப்பதன் மூலம் ஒத்துழைப்பு நல்கிய மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் கலாநிதி பாக்கியசோதி சரவணமுத்துவிற்கும், இதற்கான முகவாசகத்தை எழுதிய பேராசிரியர் ரியுடர் சில்வா அவர்களுக்கும், அறிக்கைக்கான மீளாய்வுக் குறிப்புக்களை எழுதிய கலாநிதி ராமசாமி ரமேஷ் அவர்களுக்கும் இக்கலந்துரையாடல்களின் போது கருத்துக்களை தெரிவித்த பல்கலைக்கழக

கல்வியியலாளர்களுக்கும் நன்றி தெரிவிக்கின்றோம். அதே சமயம் குறிப்பாக அனைத்து விடயங்களையும் நடைமுறைப்படுத்தும் போது ஒத்துழைப்பு நல்கிய மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தின் அனைத்து சகபாடிகளுக்கும் எமது பாராட்டுக்களைத் தெரிவிக்கின்றோம்.

இக் கலந்துரையாடல்களை ஆக்கபூர்வமாக நடத்துவதற்கு கருத்துக்கள் மூலமும் நடைமுறையிலும் ஒத்துழைப்பு வழங்கிய அனைத்துப் பல்கலைக் கழக ஆசிரியர்களுக்கும், இந்த அறிக்கையின் ஜீவநாடிகளாகத் திகழ்ந்த கல்வியியலாளர்களுக்கும், ஒட்டுமொத்த இளைஞர் சமூகத்தின் சார்பில் நன்றி தெரிவிக்கின்றோம்.

ஓர் இணக்கப்பாடு இல்லாமை காரணமாக ஏற்பட்ட பல்வேறு பிரச்சினைகள், யுத்தத்தின் பின்னரான சூழ்நிலைகளைப் பேச்சுவார்த்தையின் மூலம் தீர்வு காண்பதற்கு ஏற்புடைய பாராளுமன்ற செயற்குழு உறுப்பினர்களுக்கும், ஏனைய தரப்பினருக்கும் இவ்வறிக்கையை வெறுமனே ஓர் ஆவணமாக மட்டுப்படுத்தாமல் நடைமுறைக்குச் சாத்தியமான நடவடிக்கைகளை எடுக்குமாறும் வலியுறுத்த விரும்புகிறோம்.

**லயனல் குருகே**
சிரேஷ்ட ஆய்வாளர்
மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம்

# கலந்துரையாடல் பத்திரம் பற்றிய அறிமுகம்

உலகம் முழுவதும் வன்முறைத் தீவிரவாதம் ஒரு பாரிய கரிசனையாக விளங்குகின்ற அதேவேளை, வன்முறைத் தீவிரவாதத்தைத் தடுப்பதற்காக உலகம் முழுவதும் பரவலான வீச்செல்லையைக் கொண்ட முன்னெடுப்புக்கள் இடம்பெறுகின்றன. இது சுயேட்சையாக சமூகத்தின் சமூக, பொருளாதார, அரசியல் மற்றும் கலாசாரப் பரப்புரைகள் மீது எண்ணிக்கையற்ற ஊறுபடத்தக்க தாக்கங்களை உருவாக்கியுள்ளது. துரதிர்ஷ்டவசமாக அவ்வாறு செய்வதற்கான அவசியத்தின் பாரதூரமான தன்மையுடன் ஒப்பிடுகையில், வன்முறையிலான தீவிரவாதத்தின் பிரச்சனை கவனத்திற்கு எடுக்கப்படாமல் தொடர்ந்துமே இருக்கின்றது. இதன் பிரகாரம்,சமுதாயக் கருத்தாடலொன்றை உருவாக்குவதும் அத்துடன் பரந்த வீச்செல்லையிலான கருத்துக்களைச் சுதந்திரமாக வெளிப்படுத்துவதற்கு போதியளவிலானதும், பொருத்தமானதுமான இடத்தை உருவாக்குவது வன்முறையிலான தீவிரவாதத்தைத் தடுப்பதற்கு முழுமையான தீர்வொன்றின் இன்னொரு உள்மைய அம்சமாகும். எனவே, வன்முறையிலான தீவிரவாதத்தினதும் மற்றும் உத்தேசமான தடுப்பு நடவடிக்கைகளினதும் இயக்காற்றல் மீது பரந்த கலந்துரையாடலொன்றுக்கு அத்தகைய ஓர் இடத்தை இக் கலந்துரையாடல் வழங்குகின்றது.

வன்முறைத் தீவிரவாதத்திற்கு தீர்வுகளைக் கண்டறிவதில் இளைஞரின் உத்தேசமான ஆற்றலளவைக் தீர்மானமெடுப்போர் சோதிக்கவில்லை. வன்முறைத் தீவிரவாதத்தைத் தடுப்பது, மற்றும் பல்-இனத்திலானதும்,பல்-மதத்திலானதும் மற்றும் பல்-கலாசாரத்திலானதுமான நாடொன்றாக விளங்கும் இலங்கையில் "பரவலாக்கத்திற்கு" வன்முறையிலான தீவிரவாதத்தைத் தடுப்பது மற்றும் அவற்றுக்கான மரியாதையைப் பேணுவது ஆகியன மீது அவர்களது மனவுணர்கள் தொடர்ந்தும் செல்லுபடியானதாகும். நாட்டின் இளைஞர் தொகுதியின் வேறுபட்ட மனவுணர்வுகளைத் திரட்டுவதற்கும் அத்துடன் அதன் மூலம் வன்முறையிலான தீவிரவாதத்தினைத் தடுப்பதில் அவர்களது மனவுணர்வுகளையும், பரிந்துரைகளையும் உள்ளடக்குவதற்கும் பல்கலைக்கழகப் பட்டதாரி மாணவர்களைக் கொண்ட ஒரு தெரிவுசெய்யப்பட்ட குழுவுடன் இந்தக்கலந்துரையாடல் தொடரை மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் நடத்தியது.

இதன் பிரகாரம், "இலங்கையில் வன்முறைத் தீவிரவாதத்தைத் தடுப்பதற்கு எவ்வாறு தீர்வுகளைக் கண்டறிவது" என்ற தலைப்பின் மீது இலங்கை முழுவதும் 09 பல்கலைக்கழகங்களின் பட்டதாரி மாணவர்களுடன் ஒரு தொடரைக் கொண்ட மெய்நிகர் (ஒன்லைன்) கலந்துரையாடல் ஒன்றே இந்தக் கலந்துரையாடல் பத்திரத்திற்கான அடிப்படையாகும். தமது கருத்துக்களை வெளிப்படுத்துவதற்கு நாட்டின் வடக்கு, தெற்கு, கிழக்கு, மேற்கு மற்றும் மத்தி ஆகியவற்றின் பல்கலைக்கழகங்களில் உள்ள பட்டதாரி மாணவர்களுக்கு கட்டுப்படுத்தப்படாத இடமொன்றை உருவாக்கி, பல்கலைக்கழகங்களின் கல்விமான்களுடனான கூட்டு முயற்சியுடன் மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தின் சமூகப் பங்களிப்பு நிகழ்ச்சித் திட்டப் பிரிவு இந்த கலந்துரையாடல்களை வசதிப்படுத்தியது.

எனவே, இது "வன்முறைத் தீவிரவாதத்தைத் தடுப்பது" என்ற பிரச்சனையின் பூரணமான பகுப்பாய்வொன்றல்ல. ஆனால், வன்முறையிலான தீவிரவாதத்தின் கருப்பொருள் மீது நாட்டின் இளைய சந்ததியினரின் அங்கமாக, பல்கலைக்கழகப் பட்டதாரி மாணவர்களின் கருத்துக்களின் தொகுப்பொன்றாகும் என்பதுடன், இலங்கையில் வன்முறையிலான தீவிரவாதத்தை அடக்குவது மீது நடைமுறையிலான விவாதத்திற்கு பங்களிக்கக்கூடிய அறிக்கையொன்றாகவும் இது எதிர்பார்க்கப்படுகின்றது.

# 1. நிறைவேற்றுச் சாராம்சம்

## 1. நிறைவேற்றுச் சாராம்சம்

வன்முறையிலான தீவிரவாதத்தின் "தள்ளுகை" மற்றும் "கவர்தல்" ஆகிய காரணிகள் தொடர்பிலான முக்கியமான மனப்பாங்குகளின் முழுமையான சாராம்சமொன்றை இந்தப் பகுதி வழங்குகின்றது.அது அடுத்து, வன்முறைத் தீவிரவாதத்தின் அடிப்படைக் காரணிகளை உருப்படியாகக் கவனத்திற்கெடுப்பதற்கும் அத்துடன் இலங்கையின் இளம் பிரிவினரான பல்கலைக்கழகப் பட்டதாரி மாணவர்களினால் முன்மொழியப்பட்டுள்ள தடுத்தல் நடவடிக்கைகளை எடுப்பதற்கும் முன்மொழியப்பட்டுள்ள முக்கியமான தலையீடுகளைச் சுருக்கமாக வெளியிடும் என்றும் எதிர்பார்க்கப்படுகின்றது.

## 1.1 வன்முறைத் தீவிரவாதத்தின் தள்ளுகை மற்றும் கவர்தல் காரணிகள்

சமத்துவமின்மை, பாரபட்சம், ஒதுக்குதல், ஓரங்கட்டுதல், துன்புறுத்தல், சிவில், அரசியல், பொருளாதார, சமூக மற்றும் கலாசார உரிமைகளை மறுத்துரைத்தல் அல்லது கௌரவத்துடன் வாழ்க்கைக்கான உரிமையில் தமது சுதந்திரத்தை இழந்துள்ளனர் அல்லது இழக்கவுள்ளனர் என சனசமூகங்கள் மத்தியிலான காலங்கடந்த மனவுணர்வு ஆகியவற்றை வன்முறையிலான தீவிரவாதத்தின் முழுமையான "தள்ளுகைக் காரணிகள்" உள்ளடக்குகின்றன, ஆனால் அவற்றுக்கு அவை மட்டுப்பட்டிருக்கவில்லை. மேற்படி விடயத்திற்கு மேலதிகமாக, தொழிலின்மை, மோசமான ஆட்சி, ஊழல், பாதுகாப்பின்மையிலான நிலைமை மற்றும் ஆட்சி அத்துடன் இனத்துவ-மத-மையத்திலான அரசியல் ஆகிய சகல விடயங்களும் இலங்கையில் தொடர்ந்துமே தள்ளுகைக் காரணிகளாக விளங்குகின்றன.

இலங்கையில் வன்முறையிலான தீவிரவாதத்தினதும், அதன் எதிர்வாதத்திலான தன்மையினதும் பிரச்சனை பலதரப்பட்ட அமைப்புக்களில் தசாப்தங்களுக்கு மேலாக வெளிப்படையானதாகும்.நாட்டினுள் தீவிரவாதத்திலான வன்முறையைத் தடுப்பதற்கான தீர்வுகளுக்கு முழுமையான அவசியத்தையும் வலியுறுத்துகின்ற சான்று-அடிப்படையிலான உண்மைநிலைகளை அண்மைய கடந்த காலத்தில் சமூக-அரசியல் சூழமைவு காட்டியுள்ளது. மேலும், ஏதேனும் அமைப்பைக் கொண்ட வன்முறையிலான தீவிரவாதத்திற்கு சமூகம் தவிர்க்க முடியாத விதத்தில் பாதிக்கப்பட்டுள்ள அதேவேளை, ஒரு புறத்தில் "பாதிக்கப்பட்டவர்களாகவும்", மறுபுறத்தில் "குற்றமிழைத்தவர்களாகவும்" அவர்கள் குறிப்பாக மாறியதனால், வன்முறையிலான தீவிரவாதத்தின் "கவர்தல்" மற்றும் "தள்ளுகைக்" காரணிகளுடன் நாட்டின் இளைஞர் குழாம் பாரிய அளவிலான தொடர்பொன்றைக் கொண்டிருந்ததாக தீவிரவாதத்திலான வன்முறை தொடர்பிலான இலக்கியம் எடுத்துக்காட்டுகின்றது. அதே வேளை சுயேட்சையாக வன்முறையிலான ஏதேனும் வடிவத்தினால் சமூகம் தவிர்க்க முடியாத விதத்தில் பலியிடப்படுகின்றது.

வன்முறையிலானதீவிரவாதத்தின் மூலங்களை நோக்கிச் சனசமூகங்களை இழுத்தெடுப்பதற்கு காரணங்கற்பித்த சில கவர்தல் காரணிகளைக் கலந்துரையாடல் தொடர் வெளிப்படுத்தியது. பாரபட்சங்களிலிருந்தும், ஓரங்கட்டப்படுவதிலிருந்தும் பாதுகாப்பு, நியாயமான செவிமடுத்தலொன்றுக்கு

வாய்ப்புக்களை உருவாக்குதல். மூலவள ஒதுக்கீட்டில் சமமின்மையின் காரணமாக பொருளாதாரரீதியில் நம்பிக்கையற்ற மக்களுக்கான ஆதரவு, அரசாங்கச் சேவை முறைமையின் அரசியல்மயமாக்கலில் யாவற்றையும் உள்ளடக்கும் பிரச்சனை ஆகியவற்றின் உணர்வொன்றுக்கு தொடர்பான பிரச்சனைகள் தொடர்ந்துமே உதாசீனம் செய்யப்படுதலில் விளைவொன்றாக இது நிகழ்கின்றது. இந்தச் சூழமைவில், வன்முறையிலான தீவிரவாதத்தின் சித்தாந்தங்களை நோக்கி இளைஞர்களைக் கவர்ந்திழுப்பதும் அத்துடன் அவற்றின் ஒத்த அமைப்புக்களும் கவர்தல் காரணிகளுக்கான அடிப்படையாக வந்துள்ளன. இதன் ஊடாக வன்முறையிலான தீவிரவாதச் செயற்பாடுகளில் சம்பந்தப்படுவதற்கு மக்கள் முனைகின்றனர்.

பல்-இனத்திலானதும், பல்-மதத்திலானதும் பல்-கலாசாரத்திலானதும் அத்துடன் சமூக காட்சிப்பரப்பிலானதுமான நாடொன்றில் அரசியல் மனவுறுதியை நோக்கி பலமான தாக்குப்பிடித்தல் நிலைமை இல்லை. வன்முறையிலான தீவிரவாதத்தின் மூலங்களில் உத்தேசமான மீள்-வெளிப்படுத்தலைத் தடுப்பதற்கு சனசமூகங்கள் மத்தியில் நம்பிக்கையையும், தன்னம்பிக்கையையும் மீளத் தோற்றுவித்து, மதத் தலைவர்களினதும் மற்றும் சம்பந்தப்பட்ட தரப்புக்களினதும் முறைமையான கூட்டுமுயற்சியுடனும், ஆதரவுடனும் அதிகாரமுடையவர்களினால் குறுகிய, நடுத்தர மற்றும் நீண்ட கால நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். எனவே, இந்த கலந்துரையாடலில் இருந்து வெளிப்பட்ட முக்கியமான பரிந்துரைகளை இந்தக் கட்டுரை முன்வைக்கின்றது. அதன் முடிவுகளுக்கு தொடர்பான கொள்கையை வகுக்கும் மற்றும் நிருவாக அதிகாரமுடையவர்களின் போதியளவு கவனத்தை இந்தக் கலந்துரையாடல் குறிப்பு வலியுறுத்துகின்றது. வன்முறைத் தீவிரவாதத்தைத் தடுப்பதற்கும் அத்துடன் சகல சனசமூகங்களின் சேமநலனை உறுதிப்படுத்துவதற்கு நிலைத்திருக்கத்தக்க தீர்வுகளை நாடுவதற்கு இந்தப்பரிந்துரைகளை தீர்மானமெடுப்போர் பயன்படுத்துவார்கள் என மேலும் எதிர்பார்க்கப்படுகின்றது. குறித்துச்சொல்லக்கூடியதாக, வன்முறையிலான தீவிரவாதத்தை எதிர்ப்பது தொடர்பான நடவடிக்கைகளை விட, அதைத் தடுப்பதற்கு நிகராகவே தீர்க்கமான பெரும்பான்மையான கருத்துக்களின் போக்கு உள்ளது.

# வன்முறைத் தீவிரவாதம்
## பற்றிய சமூக தனிநபர் காரணிகள்

| தூண்டும் காரணிகள் | ஈர்க்கத் தக்க காரணிகள் |
|---|---|
| சமத்துவமின்மை | பாரபட்சங்களிலிருந்து பாதுகாக்கப் படுவதற்கான உத்தரவாதம் தொடர்பிலான உணர்வைத் தோற்றுவித்தல் |
| பாரபட்சமான கவனிப்பு | ஓரங்கட்டப்படுவதிலிருந்து பாதுகாக்கப்படுவதற்கான உத்தரவாதமளித்தல் |
| புறக்கணிப்புகள் | நியாயமான செவிமடுப்பதற்குள்ள அபிலாஷைகளும் பாதுகாப்பு உணர்வும் |
| சிவில், அரசியல், பொருளாதார, சமூக மற்றும் கலாசார உரிமைகளை மறுத்தல் | நியாயமற்ற தன்மைகளுக்கு நிவாரணங்களைப் பெறும் எதிர்பார்ப்பு மற்றும் சமாதானத்தை உருவாக்குவதாகக் கோரும் கானல் நீர் வார்த்தைகள் |
| பலவீனமான அரசாட்சியும் அரச பிரிவுகளிலுள்ள ஊழலும் | வறுமையினால் பாதிக்கப்படும் மக்களுக்கு பொருளாதார ஒத்துழைப்பை வழங்குவதும் சம காலத்தவர்களின் தூண்டப்படும் அழுத்தமும் |

## 1.2 முக்கிய பரிந்துரைகளின் சாராம்சம்

**குறுகிய காலப் பரிந்துரைகள்**

- தற்போதைய அரசியல் அமைப்பு நடவடிக்கைகள் மூலம் மறுசீரமைப்பு நடவடிக்கைகள் மூலம் வரலாற்று ரீதியான கலாசார ரீதியான பன்மைத்துவத்தை பேணிப் பாதுகாத்து மேம்படுத்துதல் போன்ற அனைத்து மதங்களினதும் கலாசாரங்களினதும் பெறுமானங்களுக்குச் சமமான அரசியல் அமைப்பில் பாதுகாப்பு வழங்கக்கூடிய வகையில் கூடிய கவனத்தைச் செலுத்த வேண்டும்.

- இனரீதியான மதரீதியான பிரிவினைகள் காரணமாக இலங்கையில் பொதுவான அடையாளத்தைக் காண முடியாதுள்ளது. போருக்குப் பின்னரான சூழமைவு காரணமாக இலங்கையின் அனைத்து மக்கள் பிரிவினரிடையே பொதுவான அடையாளத்தை முன்நிலைப்படுத்தி இணக்கப்பாட்டை ஏற்படுத்துவது தீர்மானகரமானதாகும்.

- பாடசாலைகளில் சமூகக் கல்வி என்ற பாடவிடயத்தை முன்னெடுத்துச் செல்வது, சக்தி வாய்ந்த ஒரு நடைமுறையாகும். தற்போதைய பாடசாலைப் போதனா முறைகளில் சில குறைபாடுகள் இருப்பதாகப் புலப்படுகிறது. இதனால், எதிர்பார்க்கும் பெறுபேறுகளை இதுவரை நிறைவேற்ற முடியாதுள்ளது. எனவே, மனித உரிமைகள், ஜனநாயம், பன்மைத்துவம் பல்வகைமை மற்றும் சமாதானம் ஆகிய விடயங்கள் மீது முறைசார் புரிதல் கொண்ட கலாசாரத்தை ஊட்டி வளர்ப்பதற்கு முக்கியமான பாட விடயம் சமூகக் கல்வியாகும். இதனூடாக அர்த்தபுஷ்டியுள்ள ஒரு மாற்றத்தை ஏற்படுத்துவதற்கும் அதனை அமுல்படுத்துவது தொடர்பாகவும் பயனுறுதிவாய்ந்த அவதானிப்புகளை மதிப்பாய்வு செய்வதும் கண்காணிப்பதும் அவசியமாகும்.

- அரச உத்தியோகத்தர்களின், சட்டத்தை வலுவாக்கம் செய்யும் உத்தியோகத்தர்களின் மற்றும் நீதித் துறையின் சட்ட ஆட்சியையும் வலுப்படுத்துவதற்கு அவசியமான நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ள வேண்டும். அதற்கமைய அதிகாரிகள் வன்முறை தீவிரவாதத்தைத் தடுக்கும் போது சகல மட்டங்களிலும் அமைந்த நிறுவனச் சட்டகங்கள் சமூக வெளியேற்றங்கள் வேண்டுமென்றே அல்லது அறியாமை காரணமாக கட்டமைப்பு ரீதியான மாற்றங்களுக்கு உட்படுத்துதல் தொடர்பாக மீளாய்வு செய்தல். மீள் பொருள்கோடல் செய்தல் மற்றும் அவசியமான தீர்மானங்களை மேற்கொள்ளுதல் என்பன நடைமுறைப்படுத்த வேண்டும். இதன்போது, பக்கச்சார்பின்மை, நியாயம், சட்டத்தின் முன்னே அனைவரும் சமம், பொதுமக்களின் அதிகாரங்களை செயற்படுத்துகையில் வகைப் பொறுப்புக்கூறல் இலங்கைப் பிரஜைகள் மீது தாக்கத்தை ஏற்படுத்தும் தீர்மானங்களை மேற்கொள்ளும் போது அரசின் பண்புரீதியான பிரதான அடிப்படைக் கோட்பாடுகள், அரச நிறுவனங்கள் மற்றும் அதிகாரிகளினால் அங்கீகரிக்கக்கூடிய ஒரு பின்னணியை ஏற்படுத்த வேண்டும்.

- மக்களின் பல்வகைமை கலாசார உணர்வுகளைப் பாதிக்கக்கூடிய தீர்மானங்களை மேற்கொள்வதற்கு அதிகாரம் கொண்டுள்ள திட்டவட்டமான அரச நிறுவனங்களின் உள்ளடக்கம் மீது அதிகாரிகளின் கூடிய கவனம் செலுத்தப்பட வேண்டும். இத்தகைய நிறுவனங்களில் தீர்மானங்களை மேற்கொள்ளும் பகுதிகளைப் பிரதிநிதித்துவப்படுத்துவதற்கு பதவி வகிக்கும் போது சமவாய்ப்புக்களை வழங்கும் வகையில் அவை பிரதிபலிக்க வேண்டும். சிவில் உத்தியோகத்தர்கள் அல்லது நிர்வாக சேவை உத்தியோகத்தர்கள், பிரதிநிதித்துவம் சிறுபான்மைச் சமூகங்களை பிரதிநிதித்துவப்படுத்துவதற்கும் வாய்ப்பு வழங்கப்பட வேண்டும். அரச அதிகாரிகள் இலங்கையில் உண்மையான மக்கள் பரம்பல் கட்டமைப்பை பிரதிநிதித்துவப்படுத்த வேண்டும், அது வெறுமனே அடையாளத்தை வெளிப்படுத்தும் தன்மை கொண்டதாக அமையக்கூடாது. எதிர்பார்க்கும் பிரதிநிதித்துவம் செயற்பாடு கொண்ட எண்ணிக்கை ரீதியில் கவனிக்கத் தக்க பிரதிநிதித்துவத்துடன் அமைதல் வேண்டும். இதன் மூலம் அரச தீர்மானங்களின் போது அதன் சட்ட ரீதியான தன்மையை உயர்த்தும் வகையில் அவை சிறுபான்மை இனங்கள் அரசு மீது நம்பிக்கை வைக்கக்கூடிய தன்மையை அதிகரிப்பதற்கு காரணமாக அமைதல் வேண்டும்.

- அரசகரும மொழிக் கொள்கையை பயனுறுதிவாய்ந்த முறையில் அமுலாக்குவதற்கு அதிகாரம் பெற்ற சகல அரச நிறுவனங்களுக்கும் அவசியமான நடவடிக்கைகளை மேறகொள்ள வேண்டும். மொழிக் கொள்கை மூலம் எதிர்பார்க்கும் அமைதியையும் சமாதானத்தையும் எட்டக்கூடிய வகையிலே அவை அமுலாக்கப்பட வேண்டும். அதற்கு வசதிகளையும் கூட்டிணைப்புகளையும் அரச அதிகாரிகள் மேற்கொள்ள வேண்டும்.

- சமூக ஊடகங்களை உரிய முறையில் ஒழுங்குறுத்தக்கூடிய பொறிமுறையை உருவாக்க வேண்டும். அவை வன்முறைத் தீவிரவாதத்தை ஊக்குவிக்கக்கூடிய வகையில் மேற்கொள்ளும் வாய்ப்புக்கள் நீக்கப்பட வேண்டும். அதே சமயம், சமூக ஊடகங்களை பயனுறுதி வாய்ந்த முறையில் ஒழுங்குபடுத்துவதற்கான பொறிமுறையை உருவாக்கும் அவசியம் எழுந்துள்ளது.

**மத்திம கால பரிந்துரைகள்**

- அரசியல் அமைப்பு சீராக்கம் பற்றி தற்போது இலங்கையில் நிலவும் ஊடாட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள சுயாதீன, நல்லிணக்க ஆணைக்குழு. தேசிய ஆணைக்குழு ஒன்றை அமைப்பது பற்றி அதிக கவனம் செலுத்தப்பட வேண்டும். இத்தகைய சுயாதீன ஆணைக்குழு சமூக சகவாழ்வு, சமூக ஒருங்கிணைப்பு மற்றும் வன்முறைத் தீவிரவாதத்திற்கு ஏற்புடைய சம்பவங்கள் உள்ளடக்கப்பட்டிருப்பினும், அவை மீது மாத்திரம் வரையறுக்கப்படாமல் இத்தகைய விடயங்கள் பற்றி ஆய்வுகளை மேற்கொண்டு தகுதியான நிவாரணங்களை வழங்குவதற்கு இவ்வதிகாரிகளுக்கு தத்துவம் இருத்தல் வேண்டும்.

- சமயங்களின் கண்ணோட்டங்கள் மற்றும் ஆன்மீக அர்த்தங்களை அரவணைத்துக்கொள்ளக் கூடிய முக்கியத்துவத்தை கற்பிப்பதற்கு கல்வி அமைச்சு திட்டவட்டமான நிகழ்ச்சித் திட்டங்களை ஆரம்பிக்க வேண்டும். எடுத்துக்காட்டாக சமயங்கள் சார்ந்த பாட விடயத்தில் 30 வீதமான புள்ளிகள் தமது மதம் சாராத வேறு மதங்களைக் கற்பதற்கு அவகாசம் வழங்கப்பட வேண்டும். இது சகல மாணவர்களுக்கும் கிட்டச் செய்ய வேண்டும்.

- இனத்துவமற்றும்சமயம்சார்ந்தகலாசாரங்களைப்பற்றியஅறிவும்புரிதலும்கட்டியெழுப்பப்படக்கூடிய பாட விடயத்திற்கு / ஏற்ற வகையில் பாட விடயங்கள் ஒன்றிணைக்கப்படுவதை உறுதி செய்வதற்கு பாலர் மற்றும் இரண்டாம் நிலைக் கல்வித் துறையின் மறுசீரமைப்புக்கள் அவசியமாகும். இதற்கு அமைய பாடசாலை பாட விதானங்கள் மறுசீரமைக்கப்பட்டு பன்மைத்துவம் மற்றும் மாற்றுக் கருத்துக்கள் - விழுமியங்கள் மீது மதிப்பளிக்கும் ஒரு நிலைமை உருவாக்கப்பட வேண்டும். குறிப்பாக எமது நாட்டில் அனுசரிக்கப்படும் பல்வேறு சமயங்களின் அடிப்படைப் புரிதலை வழங்குவதற்கு பாடசாலைகளில் ஒப்பியல் ரீதியான மதங்கள் பற்றிய போதனை இடம்பெற வேண்டும். ஏனைய மதங்கள் மற்றும் அவற்றின் நடைமுறை பற்றி சந்தேகம் இன்றி தவறான புரிதல்கள் நீக்கப்பட வேண்டும். அண்மையில் இலங்கையில் ஏற்பட்ட வன்முறைத் தீவிரவாத நிலைமைகளுக்கு புரிந்துணர்வின்மை முக்கிய காரணியாக அமைந்தது.

- பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு, உயர் கல்வி அமைச்சு ஆகியவை உட்பட இத்துறையில் செயற்படும் ஏனைய அதிகாரம் படைத்த நிறுவனங்கள் தமது, தொலைநோக்கு, செயற் பணி, போன்ற குறிக்கோள்களை மீள ஆராய வேண்டும். அதே சமயம் “தேசிய ஐக்கியம் மற்றும் சமூக சகவாழ்வு மீது அதிக ஆர்வத்தைக் காட்டும் அறிவுசார் இளம் தலைவர்கள்“ நாட்டில் உருவாக்கப்பட வேண்டும். அவர்களின் நிறுவன ரீதியான விளைவுகளை கட்டாயமாக உட்படுத்துவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

- சமய ரீதியாக வேறுபடுத்தப்பட்ட பாடசாலைகள் உட்பட ஆரம்ப இரண்டாம் நிலை மூன்றாம் நிலை கல்வி மட்டங்களில் இலங்கைப் பாடசாலைகளுக்கென மும்மொழிக் கொள்கை நாடு பூராவும் அமுல்படுத்தப்பட வேண்டும்.

- பயங்கரவாதச் தடைச் சட்டம் (தற்காலிக ஏற்பாடுகள்) சட்டம் மற்றும் அதன் கீழ் அமைக்கப்பட்டுள்ள ஏனைய ஏற்பாடுகள், சமூக பொருளாதார உளவியல் தாக்கங்கள், அதன் காரணமாக ஏற்பட்ட பின் விளைவுகள் மதிப்பாய்விற்கு உட்படுத்தப்பட வேண்டும். இதற்குத் தேவையான நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ள வேண்டும். அதே சமயம் தேசிய நல்லிணக்கத்தையும் சக வாழ்வையும் மேம்படுத்துவதற்கு தகுதியற்ற ஏற்பாடுகளை அமுலாக்குவது நீக்கப்பட வேண்டும.

- தேசிய இளைஞர் கொள்கையில் முன்வைக்கப்பட்டுள்ள உத்தேச முன்மொழிவுக் கொள்கைகளின் நடைமுறை மற்றும் செயல்திறன் தொடர்பான மதிப்பீடுகள் மற்றும் மதிப்பாய்வுகளுக்காக இளைஞர் விவகார விளையாட்டுத் துறை அமைச்சின் சுயாதீன செயற்குழு ஒன்று நியமிக்கப்பட வேண்டும். அதற்கமைய, பரிந்துரைகள் செயற்படுத்துவதற்கு உட்கட்டமைப்பு வசதிகள் பெயர் குறித்துரைக்கப்படாத மற்றும் பெயர்குறித்துரைக்கப்பட்ட அதிகாரிகளை உள்ளடக்கிய மதிப்பாய்வுப் பொறிமுறை ஒன்றை அமைப்பதற்கு திட்டமிட வேண்டும். இதுவரை பொதுமக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் நிறுவனங்களில் அரசியல் பங்களிப்பிற்கான இளைஞர் கோட்டா இல்லாதுள்ளது. அதே சமயம் இதன் காரணமாக இளைஞர் யுவதிகளின் அரசியல் பங்கேற்பை உயர்த்துவதற்கு இளைஞர் கோட்டாவை உத்தரவாதம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். இதன் மூலம் பல்வேறு பிரதேசங்களில் இளைஞர் யுவதிகள் எதிர்நோக்கும் பிரச்சினைகளைத் தீர்ப்பது தொடர்பான கொள்கை வகுப்பு மட்டங்களில் அவர்களின் குரலை மேம்படுத்துவதற்கு கொள்கை வகுப்பாளர் செயற்பாட்டின் போது பங்களிப்புச் செய்வதற்கும் மேற்படி ஆற்றல் மேம்படுத்தப்பட வேண்டும். இவ்வாறாக அரசியல் பங்கேற்பிற்கு வாய்ப்பு இல்லாமை தொடர்பாக அர்த்தபுஷ்டியான தீர்வு கண்டறிய முடியாது விடின், ஏற்கெனவே இளைஞர் சமூகத்தில் நிலவும் மனக் குறைகளையும் வேதனைகளையும் நம்பிக்கையீனங்களையும் எதிர்காலத்தில் பல்வேறு ஒருதலைப் பட்சமான தீர்வுகளை நோக்கி நகரும் வாய்ப்பு உள்ளது.

- வன்முறை தீவிரவாதத்தை தடுப்பதற்கு பால்நிலை சமத்துவத்தைக் கவனத்திற்கொள்ளும் ஒரு பிரவேசத்தை எடுக்க வேண்டும். அதே சமயம் பிரதான தரப்பினரால் இளைஞர்களின் யுவதிகளின் தலைமைத் துவம் ஊக்குவிக்கப்பட வேண்டும். அதற்கான நடவடிக்கைகளும் கொள்கைகளும் நிகழ்ச்சித் திட்டங்களும் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். இனங்களுக்குள்ள மனக்குறைகளையம் இனங்களிடையே காணப்படும் பகைமை உணர்வுகளை நீக்குவதற்கு பொருளாதார மேம்பாட்டிற்கான வாய்ப்புக்களில் பிரவேசிப்பதற்கும், வழங்கலை சமமாக பகிர்ந்துகொள்வதற்கும் வாய்ப்பளிக்கப்பட வேண்டும். நிலைபேறான அபிவிருத்தியின் பொருட்டு மத்திய அரசாங்கத்தினால் தமது 2030 தொலைநோக்கில் இத்தகைய பிரவேசங்களை அனுசரிக்க வேண்டும்.

**நீண்டகாலப் பரிந்துரைகள்**

கல்வி அமைச்சு, தேசிய கல்வி ஆணைக்குழுவுடன் இணைந்து தேசிய கல்விக் கொள்கைகளை அமுல்படுத்தும் மந்த கதியான நிலைமை மீளாய்வுக்குட்படுத்தப்பட்டதோடு, அவசியமான திருத்தங்களுடன் மேற்படிக் கொள்கைகளை பயனுறுதிவாய்ந்த முறையில் செயற்படுத்துவதற்கு தகுதியான உபாயமார்க்க ரீதியான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

- அரச கரும மொழிகள் ஆணைக்குழுவின் நிறுவன ரீதியான கட்டமைப்பு மாகாண மட்டத்திலான கிளைகளை ஸ்தாபித்தல் உட்பட அவற்றை வலுவூட்டி சுயாதீன ஆணைக்குழுவாக அதனை மாற்றியமைக்க வேண்டும். இத்தகைய சுயாதீன ஆணைக்குழுவிற்கு அரசகரும மொழிக்கொள்கையை அமுலாக்குவதற்கு அவசியமான வகையில் நடவடிக்கை மேற்கொள்ளாத அரச உத்தியோகத்தர்கள் வகைப்பொறுப்புக்கு உட்படுத்த வேண்டும். இவற்றை வலுவாக்கம் செய்வதற்கு அதிகாரம் கொண்ட தெளிவான நிறுவனச் சட்டகம் ஸ்தாபிக்கப்பட வேண்டும். இந்த ஆணைக்குழுவின் உறுப்பினர்களின் உள்ளடக்கம் அனைத்து இனத்துவ சமூகங்களையும் பிரதிநிதித்துவப்படுத்தக்கூடிய வகையில் அமைய வேண்டும்.


- கடந்த காலத்தில் பொறுப்பற்ற வகையில் செயற்பட்ட ஊடகங்களின் நடவடிக்கைகளின் அழுத்தம் வன்முறைத் தீவிரவாதம் மீது விசேட கவனம் செலுத்தி அதிகாரிகள் தேசிய ஐக்கியம் மீதும் அதன் விளைவுகள் மீதும் மீளாய்வு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். மேலும் இலங்கையின் பத்திரிகைப் பேரவையின் அதிகாரங்கள் சுயாதீன ஊடக ஆணைக்குழு வரை விரிவாக்கப்படுவதற்கு அதிகாரிகள் நடவடிக்கைகள் எடுக்க வேண்டும். இலங்கையில் கருத்து வெளியிடும் சுதந்திரத்தையும் பொறுப்பு வாய்ந்த ஊடகக் கலாசாரத்தையும் உத்தரவாதப்படுத்துவதற்கு உரிய அதிகாரங்கள் வலுவாக்கம் பெறக்கூடிய வகையில் அத்தகைய நிறுவனக் கட்டமைப்பை வழங்க வேண்டும்.

- சமாதானம் மற்றும் நல்லிணக்கம் தொடர்பாக கற்ற பாடங்களும் நல்லிணக்கமும் பற்றிய ஆணைக்குழு (எல்.எல்.ஆர்.சீ) பரிந்துரைகளை அமுலாக்கம் செய்ய வேண்டும்.

- இளைஞர் விவகார மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சு நாடு பூராவும் இளைஞர் தன்னார்வ சேவையை மேம்படுத்தும் வகையில் கொள்கைகள் உருவாக்கப்பட வேண்டும். அதன் மூலம் இளைஞர்களுக்கு அவர்களின் சமூக மற்றும் நாடு பற்றிய உணர்வை ஏற்படுத்தக்கூடிய வகையில் அவர்களுடைய மனப்பாங்குகளையும் நடத்தைக் கோலங்களையும் பயனுறுதி வாய்ந்த முறையில் சீரமைக்கப்பட வேண்டும். இதன் பொருட்டு யுத்தத்திற்குப் பின்னரான சூழமைவில் அனுசரிக்கப்பட்ட இளைஞர் விவகாரக் கொள்கைகள், அதாவது இலங்கையில் இளைஞர் விவகாரப் பாராளுமன்றம் (SLYP -2010), இளைஞர் விவகாரக் கொள்கைகள் (2014) மற்றும் இளைஞர்களோடு தொடர்புடைய சில நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் நிறுவனங்களை நிர்வகிக்கும் நடவடிக்கைகள் மீளாய்வு செய்யப்பட வேண்டும். தேசிய இளைஞர் சமூகத்தின் புத்தாக்கத்திற்கான சவால் (2017). இவ்வாறு பராமரிக்கப்படும் கட்டமைப்புக்களில் சுயாதீனம் என்ற அங்கங்களின் குணாம்சங்கள் தெளிவாக காணக்கூடியதாய் இருத்தல் வேண்டும்.

- இலங்கைச் சமூகச் சூழலில் வன்முறை சார் தீவிரவாதத்தை தடுப்பதற்கு செயற்படும் பிரதான தரப்பினர் பயங்கரவாதத்தை எதிர்பதற்கு கடுமையான பாதுகாப்பு நடவடிக்கைகள் என்ற அணுகுமுறையை விட வன்முறைசார் தீவிரவாதத்தின் ஆணிவேர்களுக்கான காரணிகளைக் கண்டறிந்து அதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

# கலந்துரையாடலில் பங்குபற்றியோரின் பிரதிபலிப்புகள்



# 2. அறிமுகம்

இலங்கையில் வன்முறைத் தீவிரவாதம் தொடர்பான நிலைமை இரண்டு தசாப்தங்களாகத் தொடர்கிறது. ஜனநாயகத்தின் அமுலாக்கம், பன்மைத்துவ இன மத கலாசார சன சமூகங்களின் இருப்பு, மக்கள் சர்வஜன வாக்கெடுப்பை வெளிப்படுத்தும் பிறப்புரிமையை துரிதமாக உரித்தாக்கிக் கொண்ட அரசு அமைக்கப்படுதல். என்பவற்றிற்கான காரண காரியங்கள் இருக்கின்றன. இருப்பினும் மாறி மாறி ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றும் அரசுகள் இனப் பன்மைத்துவம் மதக் கலாசார அபிலாஷைகள் என்பவற்றை நிறைவேற்ற முடியாமை. மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு தவறியமை உட்பட பல காரணிகளால் வன்முறை மேலோங்கிய சந்தர்ப்பங்கள் உண்டு. இது தொடர்பான பல அனுபவங்களும் எமக்கு உண்டு. இவற்றுள் சில வன்முறை நிலைமைகள் இளைஞர்களின் போராட்டங்கள், உள்நாட்டு கிளர்ச்சிகள் சிவில் யுத்த நிலைமைகள் வரை நீடித்தன.

ஒட்டுமொத்த இலங்கையிலும் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய பிரதான வன்முறைத் தீவிரவாத சம்பவங்களில், ரெடிகலிஸத்தில் இருந்து வன்முறைத் தீவிரவாதம் வரை விரிவடைந்தது. 1971 இல் தென்னிலங்கையில் ஆரம்பமான இளைஞர்களின் எழுச்சியை உதாரணமாகச் சுட்டிக்காட்ட முடியும். இதற்கு மேலதிகமாக 1983 இல் ஏற்பட்ட இனத்துவ ரீதியான வன்முறைச் சம்பவங்கள் இடம்பெற்றன. பின்னர் அது நீண்டகால யுத்தத்தை நோக்கி வளர்ச்சியடைந்தது. 1980 தசாப்தத்தின் இறுதிப் பகுதியில் வன்முறைத் தீவிரவாதம் மேலோங்கியது. அதன்போது இடம்பெற்ற வன்முறை தென்னிலங்கையில் கூடிய தீவிரவாதத்தை ஏற்படுத்தியது இதைத் தவிர வேறு பல சந்தர்ப்பங்களிலும் வன்முறைத் தீவிரவாதம் இலங்கையில் காணக்கூடியதாக இருந்தது. இச்சகல சந்தர்ப்பங்களிலும் மனிதர்களை இழந்தோம். சொத்துக்களும் பொருளாதாரமும் சீரழிந்தன. எமது பொருளாதார சுயாதீனத்தை நாம் இழந்தோம். சமூக சகவாழ்வு நாட்டின் சமாதானம் நல்லிணக்கம் என்பவை சீரழிந்தன.


# நிறுவன மறுசீரமைப்பிற்கான அவசியம்

| உத்தேச நிறுவனப் பொறிமுறைகள் | பணிகளும் நடவடிக்கைகளும் |
|---|---|
| நாட்டில் நிலவும் அரசியலமைப்பு ரீதியான மறுசீரமைப்புக்கள் பற்றிய விவாதம் மற்றும் ஊடாட்டம் என்பவை ஊடாக சுயாதீனமான 'தேசிய நல்லிணக்க ஆணைக்குழு ஒன்று' ஸ்தாபித்தல் மீது கூடிய கவனம் செலுத்தப்பட வேண்டும் | சமூக நல்லிணக்கம், சகவாழ்வு மற்றும் வன்முறைத் தீவிரவாத சம்பவங்கள் உட்பட அவற்றிற்கு மாத்திரம் கட்டுப்படாமல் நல்லிணக்கத்தோடு தொடர்புடைய நிலைமைகளையும் மனக்குறைகளையும் கண்டறிவதற்கும், அது பற்றி கவனம் எடுத்து அதற்கான பரிகாரங்களை வழங்குவதற்கு அவசியமான அதிகாரங்கள் இதில் உள்ளடக்கப்பட வேண்டும். |
| தேசிய இளைஞர் கொள்கை ஊடாக உத்தேச இணக்கப்பாடு கொண்ட கொள்கைகளினதும் மற்றும் முன்மொழிவுகள் நடவடிக்கை களினதும் செயற்பாடுகளினதும் பயனுறுதிவாய்ந்த தன்மையை மதிப்பீடு செய்தல் மற்றும் மதிப்பாய்வு செய்வதற்கு இளைஞர் விவகார அமைச்சினால் ஒரு சுயாதீன மதிப்பாய்வுக் குழு ஒன்று நியமிக்கப்பட வேண்டும். | அவர்கள் ஒரு செயற்குழுவிற்கு ஏற்புடைய பரிந்துரைகளை அமுல்படுத்துவதற்கு, போதிய உட்கட்டமைப்பு வசதிகளையும் அதற்கு ஏற்புடைய பொறுப்புக்களை ஒப்படைத்த அதிகாரிகளின் வகைப்பொறுப்பை உள்ளடக்கிய திட்டங்களும் மற்றும் மதிப்பாய்வு பொறிமுறை மூலம் திட்டமிடப்பட வேண்டும். |
| தற்போதைய அரச கரும மொழிகள் ஆணைக்குழு 'சுயாதீன அரச கரும மொழிகள் ஆணைக்குழுவாக மாற்றியமைக்கப்பட வேண்டும் | அரச கரும மொழிக் கொள்கையை அமுலாக்குவதற்கு இணங்காத உத்தியோகத்தர்களை வகைப்பொறுப்பிற்கு உட்படுத்தும் ஆற்றல் கொண்ட தெளிவான அதிகாரங்களையுடைய ஒரு சட்டம் அதற்கு இருத்தல் வேண்டும். இவ் ஆணைக்குழு அனைத்து சமூகங்களினதும் நியாயமான பிரதிநிதித்துவத்தைக் கொண்ட உறுப்பினர்களை உள்ளடக்கியதாக அமைய வேண்டும் |
| இலங்கைப் பத்திரிகைப் பேரவையின் அதிகாரங்களும் பணிகளும் சுயாதீன ஊடக ஆணைக்குழு வரை விரிவாக்குவதற்கு அவசியமான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். | கருத்துக்களை வெளியிடும் அடிப்படை உரிமைகளை உத்தரவாதப்படுத்தும் வகைப்பொறுப்புக் கொண்ட ஊடகக் கலாசாரத்தை இலங்கையில் ஏற்படுத்துவதற்கு தகுதியான பணிகளையும் கடமைகளையும் அவற்றை வலுவாக்கம் செய்யக்கூடிய அதிகாரங்கள் மேற்படி ஆணைக்குழுவிற்கு இருத்தல் வேண்டும். |

# 3. கலந்துரையாடலின் குறிக்கோள்கள்

- தற்போது இலங்கையில் நிலவும் சமூக சகவாழ்வினதும் ஒருங்கிணைப்பினதும் நிலைமை. இது தொடர்பாக இலங்கை இளைஞர்களினதும் யுவதிகளினதும் கருத்துக்கள் யாவை என அடையாளம் காண்க.
- இலங்கையில் “வன்முறைத் தீவிரவாதத்திற்கு வித்திட்ட காரணிகள் தொடர்பாக அடிப்படை பிரச்சினைகள் மற்றும் சவால்களை அடையாளம் காணுதல்.
- இலங்கையில் வன்முறைத் தீவிரவாதத்தை தடுப்பது பற்றிய யோசனைகளையும் பரிந்துரைகளையும் அடையாளம் காணுதல்.
- வன்முறைத் தீவிரவாதத்தை தடுப்பதற்கு ஊடகங்கள் பற்றிய சமூகக் கலந்துரையாடலை உருவாக்குதல், மற்றும் அதற்கு அவசியமான மறுசீரமைப்புக்கள் மற்றும் நடவடிக்கைகளின் தேவை பற்றி கொள்கை வகுப்பாளர்களுக்கும் ஏற்புடைய தரப்பினருக்கும் எடுத்துரைத்தல்.

# நடைமுறையிலுள்ள கொள்கை நிலைப்பாடுகளும் குறிக்கோள்களும் மற்றும் நடைமுறை யதார்த்தங்களின் முரண் நிலை



## விபரங்கள்

தேசிய இளைஞர் கொள்கையின் குறிக்கோள்கள் இல. 3.3 மூலம் கவனம் செலுத்தப்படுகின்றது. நாட்டின் இனத்துவ, கலாசார, மதம் சார்ந்த, மொழிகள், மற்றும் வாழ்க்கைக் கோலங்களின் பன்மைத்துவத்தை அடையாளம் கண்டு அவற்றை மதித்து இளைஞர்களிடையே சமூகப் பொறுப்பு பற்றிய உணர்வும் சமூகத்தில் ஐக்கியத்தை ஏற்படுத்துவதன் முக்கியத்துவம்'.

தேசிய ஐக்கியம் மற்றும் நல்லிணக்கம் பற்றிய அலுவலகம் National Unity and Reconciliation (ONUR)] அமைக்கப்பட்ட போது, 'அனைத்து மக்கள் பிரிவினரிடையே புரிந்துணர்வு, சமாதானம் மற்றும் ஐக்கியத்தை ஏற்படுத்தக்கூடிய நல்லிணக்கத்தை உத்தரவாதப் படுத்தும் நிகழ்ச்சித்திட்டத்தை தயாரித்தல், அது தொடர்பான கண்காணித்தல் மற்றும் அரசுக்கு பரிந்துரைகளை முன்வைத்தல்'

தேசிய இளைஞர் கொள்கையின் 6வது அத்தியாயத்தின் கீழ் முன்வைக்கப்படும் அடிப்படை உபாயமார்க்கங்கள் கொள் கைகள் மீது இடையீடு செய்வதன் மூலம் 'கல்வி நிறுவனங் களின் பாட விடயங்களுக்கு புறம்பான நடவடிக்கைகளை வலுப்படுத்துவதற்கும் மேம்படுத்துவதற்கும் கொள்கை ரீதியான இடையீடுகளின் முக்கியத்துவம் இதன் மூலம் வலியுறுத்தப்படுகிறது. அதே சமயம் வெளிவாரி நடவடிக் கைகள், விளையாட்டுத் துறை நடவடிக்கைகள், சிருஷ் டிகரமான தன்மையை முன்னேற்றும் சந்தர்ப்பங்கள் போன்ற பொழுது போக்கிற்குரிய வாய்ப்புகளை அடையாளம் கண்டு மேம்படுத்துதல், பல்வேறு கலை மற்றும் கலாசார நடவடிக் கைகளை மேம்படுத்துவதற்கு நிறுவனங்களை அமைத்தல், மற்றும் பாடசாலைகளின் முன்னேற்றம் கருதி வெளிவாரி நடவடிக்கைகளை பிரதேச மட்டத்திலும் வளைய மட்டத்திலும் மேம்படுத்தும் அவசியத்தை மேலோங்கச் செய்தல்.

## பல்கலைக்கழக கல்வியியலாளர்களின் கருத்துக்கள்

அனைத்து இனங்களுக்கிடையிலும் மதப்பிரிவினர்களுக்கிடையிலும் அனைத்து கலாசார பிரிவினருக்கிடையிலும், அவரவர்களுக்கிடையே பயனுறுதிவாய்ந்த பரிமாற்றத்தையும் உள்ளார்ந்த நடவடிக்கைகளை மேம்படுத்துகையிலும் சக்திவாய்ந்த மனித மற்றும் பௌதீக வளங்கள் கொண்ட நிறுவனக் கட்டமைப்புக் கொண்ட நீண்டகால உபாயமார்க்கங்கள் இல்லாமை வன்முறைத் தீவிரவாதத்தை தடுப்பதில் பாரிய தடையாக அமைந்துள்ளது.

சமூகங்களுக்கும் நிறுவனங்களுக்குமிடையேயான சட்டகங்கள் இடையே குறிப்பிடத்தக்க மட்டத்தில் நிலவும் நம்பிக்கை பற்றிய இடைவெளியூடாக அவர்களை மேலும் விரிசலாக்குவதற்கும், சமூகங்களிடையே பிளவுகளையும் அதிகரிக்கின்றது. மக்கள் பிரிவினரை திருப்தியற்ற நிலைமைக்கு இட்டுச் செல்லும் அடிப்படைக் காரணிகளையும் ஏற்புடைய பிரச்சினைகளையும் தீர்ப்பதற்கு, அரசியல் மயமாக்கப்படாத நிறுவன ரீதியான பாதுகாப்பு இல்லாமை தேசிய நல்லிணக்கத்திற்கும் ஐக்கியத்திற்கும் தடையாக அமைந்துள்ளது

பன்மைத்துவ பல்லின பல்மத ஒத்துழைப்பின் மூலம் மீள உயிரூட்டுவதற்கான இளைஞர் மத்தியில் புரிந் துணர்வு, கலை மற்றும் விளையாட்டுத் துறை ஆற்றல் கள் பற்றி, அவர்களின் பகுப்பாய்வுகளை பயனுறுதிவாய்ந்த முறையில் பயன்படுத்துவதற்கு ஒரு வேலைத்திட்டம் இல்லாமை, நாட்டின் பன்முக கலாசார சமூகச் சூழமைவில் உள்ள பிரதான சவால் ஆகும். இது வன்முறைத் தீவிரவாதத்திற்குக் காரணங்களாக அமைந்துள்ளன.

# 4. பயன்படுத்திய முறைமை

இக்கட்டுரையைத் தயாரிப்பதற்கு இலங்கையில் தேசிய மட்டத்தில் செயற்படும் தெரிவுசெய்யப்பட்ட பல்கலைக் கழகங்களின் பட்டதாரி மாணவர்களுடன் வன்முறைத் தீவிரவாதத்தை தடுப்பது பற்றிய ஒரு தொகுதி கலந்துரையாடல்கள் இடம்பெற்றன.

மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தின் ஆய்வாளர் குழுவொன்றினால் குறிப்பிட்ட பல்கலைக் கழகங்களின் சிரேஷ்ட விரிவுரையாளர்களுடன் ஒருங்கிணைந்து இக்கலந்துரையாடல்களை நெறிப்படுத்துவதற்கு வசதிகள் செய்து கொடுக்கப்பட்டன. இக்கலந்துரையாடல்களின் போது மெய் நிகர் (ஒன்லைன்) ஊடாக பங்குபற்றிய பட்டதாரி மாணவர்கள் பன்மைத்துவ இனங்களையும் மதங்களையும் பிரதிநிதித்துவப்படுத்தினர். அதே சமயம் அதன்போது பங்குபற்றுனர்களின் பால்நிலைப் பிரதிநிதித்துவம் சமநிலையுடன் முன்நிலைப்படுத்தப்பட்டது. இதன்பொருட்டு உரிய கவனம் செலுத்தப்பட்டது.

கலந்துரையாடிய விடயங்களை ஆய்வுக்குழு பதிவு செய்தது. அதே சமயம் இலங்கையின் பல்வேறு இனக்குழுமங்களையும் - மதக் குழுமங்களையும் பிரதிநிதித்துவப்படுத்திய தனிநபர்களுக்கு பல்வேறு வகையில் தாக்கத்தை ஏற்படுத்திய வன்முறைத் தீவிரவாதம் பற்றி இலங்கை எதிர்நோக்கும் மிகச் சிக்கலான பிரச்சினை தொடர்பாக இளைஞர் யுவதிகள் எதிர்நோக்கும் யதார்த்த நிலைமையை முன்வைப்பதற்கு அவகாசம் அளித்தமையால் அவர்கள் சிறந்த கருத்துக்களை முன்வைத்தனர். அவை பகுப்பாய்வு செய்யப்பட்டன.

தற்போது நிலவும் அரச நிர்வாக முறைமையின் கீழ் ஏற்கனவே செயற்படும் முறைசார் கட்டமைப்புக்கள் பற்றி, சமத்துவம், நீதி மற்றும் பாரபட்சமான கவனிப்பை தடுப்பதற்கும் வன்முறைத் தீவிரவாதம் போன்ற துறைகளுக்கும் இடையேயான உறவு நிலையைப் பிரதிநிதித்துவப்படுத்தும் திட்டவட்டமான அல்லது குறிப்பிட்ட மட்டத்தில் அரசியல் அமைப்பு மற்றும் வேறு சட்டவாக்க நடவடிக்கைகளின் குறிப்பிடத்தக்க விடயங்களைப் பற்றி இக்கட்டுரை சுருக்கமாக ஆராயப்பட்டது.

# கலந்துரையாடற் தொடரொன்றின் மூலம் இணங்காணப்பட்டு வகைப்படுத்தப்பட்ட பிரச்சினைகள்

| | அடிப்படைப் பிரச்சினை | பிரச்சினைகள் தொடர்பில் கவனம் செலுத்தப்பட்ட பல்கலைக்கழகங்கள் | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | கொழும்பு | கிழக்கு | யாழ்ப்பாணம் | களனி | பேராதனை | ரஜரட்ட | ருஹுணு | சபரகமுவ | தென் கிழக்கு | ஸ்ரீ ஜயவர்தனபுர |
| 1 | பல்வேறு மதங்களைச் சார்ந்த நபர்களுக்குமான சமமான மதிப்பும் பாதுகாப்பும் பற்றிய உணர்வு இல்லாமையும் அனைத்தின மக்களும் உள்வாங்கப்படக் கூடிய பொதுவான தேசிய அடையாளமொன்று இல்லாமையும். | ☑ | ☑ | ☑ | ☑ | ☑ | ☒ | ☑ | ☑ | ☑ | ☑ |
| 2 | பல்மத மற்றும் கலாசாரம் கொண்ட சமூகமொன்றில், சமத்துவம், நியாயம் என்பவற்றின் முக்கியத்துவம் தொடர்பில் உரிய அங்கீகாரம் இல்லாத கொள்கைகளும் பயன்பாடுகளும் காணப்படுவதும் அவை நடைமுறைப்படுத்தப்படுவதும் | ☑ | ☑ | ☑ | ☑ | ☑ | ☑ | ☑ | ☑ | ☑ | ☑ |
| 3 | மத ரீதியான நிறுவனங்கள் அரசியல்மயமாக்கப்படுதல் இன, மத ரீதியான பேதங்களைத் தூண்டுகின்றது. | ☑ | ☑ | ☑ | ☑ | ☑ | ☒ | ☑ | ☑ | ☑ | ☑ |
| 4 | சட்டத்தின் அமுலாக்கம் அரசியல்மயமாவதன் ஊடாக சட்ட ஆதிக்கத்தின் சுயாதீனத் தன்மை குறைமதிப்பீட்டுக்கு உள்ளாகவும், சட்டத்தை நடைமுறைப்படுத்தும் அதிகாரிகள் மீது பொது மக்கள் வைத்திருக்கும் நம்பிக்கை குறைவதற்கும் காரணமாகின்றது. | ☑ | ☑ | ☑ | ☑ | ☑ | ☒ | ☑ | ☑ | ☑ | ☑ |
| 5 | அரசியலமைப்பின் மூலம் பாதுகாக்கப்பட்டுள்ள அரசகரும மொழிக் கொள்கையை அதிகாரிகள் பயனுள்ளவாறு நடைமுறைப்படுத்தவில்லை | ☑ | ☑ | ☑ | ☑ | ☒ | ☒ | ☒ | ☑ | ☒ | ☑ |
| 6 | சமூகத்தில் அடிப்படை உரிமைகள், சுதந்திரம் மற்றும் சட்டத்தின் ஆதிக்கம் தொடர்பிலான உன்னத நிலை இல்லாமையால், தனி நபர்களிடம், தமது குடும்பங்களைப் போன்றே, ஒட்டுமொத்த சமூகத்திற்கும் விடுக்கப்படும் சமூக, பொருளாதார, மற்றும் உள ரீதியான பாதிப்புகளும் அதற்கான விலையும் பற்றிய உரிய மதிப்பீடொன்று இல்லாமை. | ☑ | ☑ | ☑ | ☒ | ☑ | ☒ | ☒ | ☒ | ☑ | ☑ |
| 7 | சமூக ஒற்றுமையை வளர்ப்பதற்கும் வன்முறைத் தீவிரவாதத்திற்காக ஏற்படக் கூடிய அடிப்படைகளைக் குறைப்பதற்கும் காரணமாகின்ற சட்டங்களைச் செயற்படுத்துவதிலுள்ள குறைபாடுகள் | ☑ | ☑ | ☑ | ☑ | ☑ | ☒ | ☑ | ☑ | ☑ | ☑ |
| 8 | அரசியலமைப்பினால் உறுதி செய்யப்பட்டுள்ள பாரபட்சங்களை நீக்குகின்ற ஏற்பாடுகளை நடைமுறைப்படுத்தாமையும் பல்கலாசார மக்களிடையே சமூக மற்றும் கலாசார உரிமைகள் பாதுகாக்கப்படுவதையும் மேம்படுவதையும் உறுதிப்படுத்துவதற்கான நிலையான வழிவகையொன்று இல்லாமை. | ☑ | ☑ | ☑ | ☑ | ☑ | ☒ | ☑ | ☑ | ☑ | ☑ |
| 9 | நாட்டின் பல்கலாசார மக்களின் பரிணாமம் தொடர்பிலான அறிவையும் புரிந்துணர்வையும் கட்டியெழுப்பும் உத்திகள் ஆரம்ப மற்றும் இரண்டாம் நிலைக் கல்வி முறையில் போதுமான அளவில் உள்ளடக்கப்படவில்லை. | ☑ | ☑ | ☑ | ☑ | ☑ | ☒ | ☑ | ☑ | ☑ | ☑ |
| 10 | சமூக ஒத்துழைப்பை மேம்படுத்துகின்றதும், வன்முறை ரீதியான தீவிரவாதம் ஏற்படக் கூடிய அடிப்படைக் காரணங்களை வேருடன் களைகின்றதுமான கொள்கை ரீதியான நிலைப்பாடுகள், மூலோபாயங்கள் செயற்பாட்டுத் திட்டங்கள் தொடர்பில் பாடசாலை ஆசிரியர்களுக்கு உரிய கூருணர்வை ஏற்படுத்தக் கூடிய ஒரு வேலைத்திட்டம் இல்லாமை. | ☑ | ☑ | ☑ | ☑ | ☑ | ☑ | ☑ | ☑ | ☑ | ☑ |

| | அடிப்படைப் பிரச்சினை | பிரச்சினைகள் தொடர்பில் கவனம் செலுத்தப்பட்ட பல்கலைக்கழகங்கள் | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | கொழும்பு | கிழக்கு | யாழ்ப்பாணம் | களனி | பேராதனை | ரஜரட்ட | ருஹுணு | சபரகமுவா | தென் கிழக்கு | ஸ்ரீ ஜயவர்தனபுர |
| 11 | பல்கலைக் கழகங்களிலும் ஏனைய உயர்கல்வி நிறுவனங்களிலுமுள்ள கற்பிப்போர் பணிக் குழுக்களின் உறுப்பினர்களிடமுள்ள இன, மத ரீதியான தீவிரவாதக் கருத்தியல்கள் நிச்சயமாக சமூக நல்லிணக்கத்திற்கு தீங்கிழைக்கும். | ☑ | ☑ | ☑ | ☑ | ☑ | ☒ | ☒ | ☑ | ☒ | ☑ |
| 12 | இளைஞர் அமைப்புகளில் சமத்துவத்துடன் கூடிய கவனிப்புகளும் நியாயமான சந்தர்ப்பங்களும் கிடைக்காமை தொடர்பான அதிருப்திவாய்ந்த உணர்வுகள் தொடர்பான பிரச்சனை (உதா: இளைஞர் பாராளுமன்றம்) மற்றும் இளைஞர்களுக்கான சமமான பிரதிநிதித்துவத்துடன் கூடிய தேசிய மட்டத்திலான அமைப்பொன்று இல்லாமை | ☑ | ☑ | ☑ | ☑ | ☑ | ☑ | ☑ | ☑ | ☑ | ☑ |
| 13 | நியாயமான பிரதிநிதித்துவம் காணப்படுகின்ற, ஏற்றுக் கொள்ளக் கூடிய நிறுவன ரீதியான பொறிமுறையுடன் கூடிய உள்ளடக்கத்துடன் கொள்கை வகுப்புச் செயற்பாடுகளை பின்பற்றுவதில் உண்மையான அரசியல் ரீதியான விருப்பம் இல்லாமை. | ☑ | ☑ | ☑ | ☑ | ☑ | ☑ | ☑ | ☑ | ☑ | ☑ |
| 14 | பல்லின மற்றும் பன்மத ஒத்துழைப்புகளுக்கு உயிரூட்டுவதற்கான இளைஞர்களின் புரிதல், வளர்ச்சி தொடர்பில் அவர்களது பகுப்பாய்வு, கலை மற்றும் விளையாட்டுத் திறமைகளைப் பயனுள்ளவாறு பாவிப்பதற்குப் பொருத்தமான முயற்சிகள் எடுக்கப்படாதிருத்தல். | ☑ | ☑ | ☑ | ☑ | ☑ | ☒ | ☑ | ☑ | ☑ | ☑ |
| 15 | ஒரு சமூகத்திற்கு நன்மை பயக்கும் வகையில், கலைரீதியான வடிவங்களின் ஊடாக கட்டியெழுப்பப்பட்ட தீவிரவாத கருத்தியல்கள் (உதா: திரைப்படங்கள், தொலைக்காட்சி நாடகங்கள், பாடல்கள் போன்றவை மூலம்) ஊடாக வன்முறை ரீதியான தீவிரவாதத்தைத் தூண்டக் கூடிய வாய்ப்பை சமூகமயப்படுத்தும் நிலைமை. | ☑ | ☑ | ☑ | ☑ | ☑ | ☑ | ☑ | ☑ | ☑ | ☑ |
| 16 | பயனுள்ள வகையில், மதங்களுக்கிடையே, இனங்களுக்கிடையே கலாசாரங்களுக்கிடையே பகிர்வுகளையும் இடைச் செயற்பாடுகளையும் மேம்படுத்துகையில், வலுவாகவும் அவ்வாறே, அதற்குத் தேவையான பௌதீக மற்றும் மனித வளங்கள் நிறைந்த நிறுவனக் கட்டமைப்பொன்றுடன் கூடிய நீண்டகால மூலோபாயங்கள் இல்லாமை. | ☑ | ☑ | ☑ | ☑ | ☑ | ☑ | ☑ | ☑ | ☑ | ☑ |
| 17 | பிரசைகளின் பல்கலாசார மனப்பாங்குகளைப் பாதிக்கின்ற தீர்மானங்களை எடுப்பதற்குத் தேவையான அதிகாரங்களும், அதற்குரிய பணிப் பொறுப்புக்களையுடைய குறிப்பிட்ட அரச நிறுவனங்களில் தீர்மானமெடுக்கும் கட்டமைப்புகளைப் பிரதிநிதித்துவப்படுத்துவதற்கும் பதவிகளை வகிப்பதற்குமான சமமான வாய்ப்புகளுக்கான சந்தர்ப்பம் போதுமானதாக இல்லாமை. | ☒ | ☑ | ☑ | ☑ | ☑ | ☒ | ☒ | ☑ | ☑ | ☒ |
| 18 | பன்மைத்துவ சமூகமொன்றின் மக்களுக்கும் நிறுவன ரீதியான கட்டமைப்புகளுக்கும் இடையிலான நம்பிக்கையில் குறிப்பிடத்தக்க மட்டத்தில் இடைவெளி காணப்படுவதனூடாக மக்களிடையே புறக்கணிப்பு உணர்வும் பிளவுகளும் ஏற்படுத்தப்படுதல். | ☑ | ☑ | ☑ | ☑ | ☑ | ☑ | ☑ | ☑ | ☑ | ☑ |
| 19 | முன்னணி மற்றும் சமூக ஊடகங்களில் பொறுப்பற்ற அறிக்கையிடல்கள் மற்றும் நெறிமுறைகளுக்கு எதிரான பாவனைகளும் இன ரீதியான அல்லது மதரீதியான தீவிரவாதக் கருத்துகளிலிருந்தான தவறான மேற்கோள்களை பிரச்சாரம் செய்தல் தீவிரவாதத்தை உருவாக்கக் காரணமாகின்றன. | ☑ | ☑ | ☑ | ☑ | ☑ | ☒ | ☑ | ☒ | ☑ | ☑ |
| 20 | தேர்தற் காலங்களில் பரவலானதும் ஒழுங்கற்றதுமான ஊடகப் பாவனையின் ஊடாக இனரீதியானதும் மதங்களை மையப்படுத்திய பார்வைக் கோணங்கள் மூலமும் நபர்களிடையே தவிர்க்க முடியாதவாறு உணர்ச்சிகள் தூண்டிவிடப்பட்டன. | ☑ | ☑ | ☑ | ☑ | ☑ | ☒ | ☑ | ☒ | ☑ | ☑ |

# 5. அடிப்படை பிரச்சனைகள், சட்ட நிலைமைகள் மற்றும் பரிந்துரைகள்

| பிரதான பிரச்சினைகள் | தற்போதைய அரசியலமைப்பு, சட்ட மற்றும் நிர்வாகச் சட்டகம் | பிரதான பரிந்துரைகள் | நிறுவன / தரப்பினர் பொறுப்புக்கள் |
|---|---|---|---|
| **அடிப்படைக் கவனயீர்ப்பு : நிதியுரிமைகள், அரச கரும மொழிக் கொள்கை, சட்டம் மற்றும் சர்வதேச சமவாயங்கள்** | | | |
| பல்வேறு மதங்களைச் சார்ந்த மனிதர்களுக்கு சமத்துவமான கௌரவமும் பாதுகாப்பும் பற்றிய உணர்வு இல்லாமை மற்றும் அனைத்து இனத்துவ மற்றும் மதப் பிரிவினருக்கான அடையாளம் இல்லாமை, வன்முறைசார் தீவிரவாதத்திற்கான மறை சக்தியின் வேர்கள் மீளத் தோன்றுவதற்கு காரணமாக அமைகிறது.<br><br>சமய நிறுவனங்கள் அரசியல் மயமாக்கல் இனத்துவ மற்றும் மதம்சார் பிரிவினைகளுக்கு காரணமாக அமைகின்றன. இது பல்வேறு மதங்களையும் கலாசாரங்களையும் கொண்ட ஒரு சமூகத்திற்கு சமத்துவத்தினதும் நியாயத்தினதும் பெறுமானங்களை உரிய முறையில் அடையாளம் காணாத கொள்கைகள் மற்றும் நடைமுறைகளை தொடர்ச்சியாக அமுல்படுத்தும் துரதிஷ்டவசமான தன்மைகளின் பெறுபேறாகும். | **அரசியலமைப்பின் III வது அத்தியாயம்.**<br><br>10வது உறுப்புரை, அனைத்து தனி நபர்களும் தாம் விரும்பிய மதத்தை வழிபடுவதற்கு அல்லது பின்பற்றுவதற்கான சுதந்திரம். அல்லது நம்பிக்கைகளை முன்னெடுப்பதற்கு அல்லது ஏற்றுக்கொள்வதற்கான சுதந்திரம் உட்பட சிந்தனைச் சுதந்திரம், மனச்சாட்சிக்கான சுதந்திரம் மற்றும் மதச் சுதந்திரம் என்பவற்றிற்கு உரிமை உண்டு. | பல்வேறு இனங்களையும் மதங்களையும் பின்னணியாகக் கொண்ட பிரஜைகளை பிரதிநிதித்துவப்படுத்தும் அடையாளத்தையும் சுதந்திரத்தையும் கௌரவிக்கும் முக்கியத்துவத்தை வலியுறுத்தும் அதேவேளை, இலங்கை மக்கள் இலங்கையர்கள் என அடையாளம் காணப்படுவதற்கு பரந்துபட்ட மனப்பாங்கு ரீதியான மாற்றம் அவசியமாகும்.<br><br>தற்போதைய அரசியலமைப்பு சீர்திருத்த நடவடிக்கைகள் வரலாற்று ரீதியான, கலாசார பன்மைத்துவ சமூக நிலைமைகளை பாதுகாத்தலும் மேம்படுத்தலும், சகல மதங்களினதும் கலாசார பெறுமானங்களுக்கு சமமான அரசியலமைப்பு ரீதியான உத்தரவாதம் வழங்குவதற்கு போதியளவு கூடிய கவனம் செலுத்தப்பட வேண்டும்.<br><br>மதங்களின் கண்ணோட்டங்களும் திட சங்கற்பங்களும் என்ற பொருளில் அவற்றை அரவணைக்கும் முக்கியத்துவத்தை புரிந்துகொள்வதற்கு அடிப்படை நடவடிக்கைகள் அத்தியாவசியமாகும். இதற்கு மேலதிகமாகக், அரசியல் நிகழ்ச்சி நிரலோடு நெருங்கிய தொடர்புகள் இருப்பதன் காரணமாக, சமூகங்களை பிளவுபடுத்துவதற்குக் காரணமான சாதனைகளை மேம்படுத்துவது பயனற்றது. பன்மைத்துவத்திற்கு மதிப்பளிப்பது | பிரஜைகளின் அடிப்படை உரிமைகளைப் பாதுகாக்கும் மேம்படுத்தும் அடிப்படைப் பொறுப்பு அரசுக்கு உரியது. அதாவது இப்பொறுப்பு நிறைவேற்றுத் துறைக்கும், சட்டவாக்கத் துறைக்கும் நீதிமன்றத்திற்கும் உண்டு.<br><br>பிரஜைகளின் அடிப்படை உரிமைகள் மீறப்படும் சந்தர்ப்பங்களில் ஆர்ப்பாட்டம் செய்தல் உட்பட இந்நடவடிக்கைகளைக் கண்காணித்தல் தொடர்ச்சியாக கண்காணிக்கும் பொறுப்பு குறிப்பாக சிவில் சமூகத்திற்கு உண்டு. |

| | | | |
|---|---|---|---|
| | | என்பது அங்கீகரிக்கப்பட்ட பொதுவான அளவுகோலாகும்.<br><br>நல்லிணக்கத்தை அரவணைக்கும் இனத்துவ அல்லது மதம்சார் பிரிவினைகளைப் புறக்கணிப்பதற்கு கொள்கை வகுப்பாளர்கள், சிவில் சமூக செயற்பாட்டாளர்கள், கல்வியியலாளர்கள், ஊடகங்கள் (பிரதான நீரோட்டமும் சமூக ஊடகங்களும், மதத் தலைவர்கள், இளைஞர்கள் மற்றும் பிரஜைகள் உட்பட பல்வேறு பங்காளரிடையே மனப்பாங்கில் மாற்றத்திற்காக செயற்படுவது கட்டாயத் தேவையாகும். | |
| சட்டத்தை அமுலாக்குவது அரசியல் மயமாக்கப்படுதல் இந்நிலையில் சட்டத்தின் ஆட்சியை பலவீனப்படுத்துவதற்குக் காரணமாகும். அதே சமயம் சட்டத்தை அமுலாக்கும் அதிகாரிகள் மற்றும் நிறுவனங்கள் மீது கொண்டுள்ள பொது மக்களின் நம்பிக்கை பலவீனப்படுத்தப்படுகிறது.<br><br>வேண்டுமென்றே அல்லது வேறு வகையில் மேற்கொள்ளப்படும் பாரபட்சமான கவனிப்பிற்கு காரணமாகும். அரச தீர்மானங்கள், பன்மைத்துவ கலாசார சமூகத்தில் மனிதர்களுக்கான சட்டத்தின் சமமான பாதுகாப்பு பற்றிய உண்மை உணர்வுகளை குறைத்து மதிப்பிடும் நீண்டகாலத் தடைகளாக தொடர்ச்சியாக அடையாளம் காணப்பட்டுள்ளது. | **அரசியலமைப்பின் IIIவது அத்தியாயம்**<br><br>12(2)வது உறுப்புரை<br><br>சட்டத் தீர்ப்பு மற்றும் செயற்பாடு சட்டத்தின் பாதுகாப்பு முழுமையான நியாயத்துடன் இடம்பெற வேண்டும்.<br><br>12(2)வது உறுப்புரை<br><br>எந்தவொரு பிரஜையும் இனம், மதம், மொழி, சாதி, பால்நிலை வேறுபாடு, அரசியல் கருத்து அல்லது பிறந்த இடம் போன்ற காரணங்களின் நிமித்தம் அல்லது இவற்றுள் ஏதாவது காரணத்தின் நிமித்தம் பாரபட்சமாகவே, அல்லது விசேடமாகவோ கவனித்தல் ஆகாது. | அரச உத்தியோகத்தர்கள், சட்டத்தை வலுவாக்கம் செய்யும் அதிகாரிகள் மற்றும் நீதிமன்றத்தின் சுயாதீனத் தன்மையை செயற்படுத்துவதற்கு அவசியமான நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ள வேண்டும். அதற்கமைய அதிகாரிகள் வன்முறைத் தீவிரவாதத்தைத் தடுக்கும் போது அனைத்து மட்டங்களிலுமுள்ள நிறுவனச் சட்டகங்களுக்கு நீடித்து நிலைக்கக்கூடிய வகையில் சமூகப் புறக்கணிப்பு வேண்டும் என்றோ அல்லது அறியாமலோ கட்டமைப்பு ரீதியான பாரபட்சங்களுக்கோ அல்லது சிறப்புரிமைகளுக்கோ ஆளாக்குவதை மீளாய்வு செய்தல், மீளப் பொருள்கோடல் மற்றும் ஏற்புடைய பிரச்சினைகளுக்கான தீர்வுகளை வழங்குவதை மேற்கொள்ள வேண்டும்.<br><br>மேலும் அரசியலமைப்பு ரீதியாக உத்தரவாதப்படுத்தப்பட்டுள்ள அடிப்படை உரிமைகள் எவ்வகையிலும் புறக்கணிக்கப்படாத வகையில், சட்டமியற்றுவோரினால், வன்முறைத் | பிரஜைகளின் அடிப்படை உரிமைகளைப் பாதுகாத்தல் மற்றும் மேம்படுத்துதல் ஆகியவற்றின் அடிப்படைப் பொறுப்புக்கள். அரசுக்கே உண்டு. அதாவது நிறைவேற்றுத் துறைக்கும், சட்டவாக்கத் துறைக்கும் நீதித் துறைக்கும் உண்டு.<br>பிரஜைகளின் அடிப்படை உரிமைகள் மீறப்படம் சந்தர்ப்பங்களில ஆதறித்து வாதாடுதல் உட்பட மேற்பார்வை செய்யும், தொடர்ச்சியாக அவதானிக்கும் பொறுப்பு சிவில் சமூகத்திற்கு உண்டு. |

| | | | |
|---|---|---|---|
| | | தீவிரவாதத்தின் அடிப்படைக் காரணிகளைக் குறைப்பதற்கு அவசியமான சட்டங்களை உருவாக்க வேண்டும். வன்முறைத் தீவிரவாதத்தை மேம்படுத்தும் சமூக சகவாழ்விற்கும் தேசிய ஐக்கியத்திற்கும் பாதகமான நடவடிக்கைகளை குற்றங்களாகக் கருத வேண்டும்.<br><br>அத்தகைய அரசியலமைப்பு சட்டகங்களிலிருந்து வன்முறைத் திவிரவாதத்திற்கு உட்படுத்தப்படும் ஆட்களுக்கு சட்ட ரீதியான நிவாரணங்களை பெற்றுக்கொள்ளக் கூடியதாக இருக்கும்.<br><br>பொதுமக்களின் பன்மைத்துவ கலாசார உணர்வுகள் மீது தீர்மானகரமான தாக்கங்களை ஏற்படுத்தும் அதிகாரங்கள் கொண்ட விசேட அரச நிறுவனங்களின் உள்ளடக்கத்தை தீர்மானிக்கும்போது அவற்றின் பிரதிநிதித்துவம் தொடர்பாக அதிகாரிகள் கவனம் செலுத்த வேண்டும். எனவே அத்தகைய நிறுவனங்களுக்கு ஆட்சேர்ப்பது தொடர்பாக (தொல் பொருள் திணைக்களம், நூதனசாலைத் திணைக்களம், தேசிய சுவடிகள் பாதுகாப்புத் திணைக்ளகம், பௌத்த, இந்து, கிறிஸ்தவ மற்றும் முஸ்லிம் மத விவகாரங்கள் திணைக்களம். தேசிய நல்லிணக்கப் பணியகம், மத்திய கலாசார நிதியம், தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனம் மற்றும் அரச கரும மொழிகள் ஆணைக்குழு) தீர்மானங்களை மேற்கொள்ளும் போது அப்பதவிகளை பிரதிநிதித்துவப்படுத்துவதற்கான சமவாய்ப்புக்களின் அவசியத்தை பிரதிபலிக்க வேண்டும். | |

| | | | |
|---|---|---|---|
| அரசியலமைப்பில் குறிப்பிட்டவாறு அரச கரும மொழிகளின் கொள்கை அதிகாரிகளால் பயனுறுதிவாய்ந்த முறையில் செயற்படுத்தப்படுவதில்லை.<br>பன்மைத்துவ சமூகத்தில் ஊடாட்டத்திற்கான சந்தர்ப்பம் மறைந்து போவதன் பெறுபேறாக அரசியலமைப்பு ரீதியாகவும் ஏனைய சட்ட ஏற்பாடுகள் தொடர்பாகவும் பலவீனமான ஒரு நிலையே காணப்படுகிறது. சமூகங்களுக்கிடையே வளர்ச்சியடையும் சந்தேகமும் நிலைமையை மேலும் மோசமாக்கியுள்ளது.. இதற்கமைய<br>குறுகியகால: மத்திம கால நீண்டகால உபாய மார்க்கங்கள் இல்லாமை மற்றும் அரச கரும மொழிக்கொள்கையை நடைமுறைப்படுத்துவதற்கு பிரயோக ரீதியான திட்டம் கிடையாது. வன்முறைத் தீவிரவாதத்தின் ஆரம்ப காரணிகளுக்கு இது கூடிய தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. | அரசியலமைப்பின் IV வது அத்தியாயம் - மொழி<br>18வது உறுப்புரையின் (13வது அரசியலமைப்புத் திருத்தத்தினால் திருத்தப்பட்டது)<br>1) இலங்கையின் அரச கரும மொழி சிங்களம் ஆகும்.<br>2) தமிழ் மொழியும் அரச கரும மொழியாகும்.<br>19வது உறுப்புரை<br>சிங்கள மொழியும் தமிழ் மொழியும் இலங்கையின் தேசிய மொழிகளாகும்.<br>16வது அரசியலமைப்பிற்கான திருத்தத்திற்கு அமைய<br>21வது உறுப்புரை (போதனா மொழி)<br>22வது உறுப்புரை (நிர்வாக மொழி<br>23வது உறுப்புரை - சட்டவாக்க மொழி<br>24வது உறுப்புரை நீதிமன்ற மொழி<br>போன்ற ஏற்பாடுகள் ஊடாக மொழி உரிமைகள் மேலும் வலுவாக்கம் செய்யப்பட்டுள்ளது.<br>அரசியலமைப்பில் உத்தரவாதப்படுத்தப்பட்டுள்ள அரச கரும மொழிக் கொள்கை, பின்வரும் அரச நிர்வாகச் சுற்றறிக்கை இலக்கம் : 18/2009 மூலம் மேலும் வலியுறுத்தப்பட்டுள்ளது.<br>"அரச கரும மொழிக்கொள்கையை வலுவாக்கம் செய்வதற்கு பிரதான அரச கரும மொழிக் கொள்கையை அமுலாக்கம் செய்யும் உத்தியோகத்தர்களினதும். அரச கரும மொழிக்கொள்கையை அமுலாக்கம் செய்யும் அதிகாரிகளினதும் பொறுப்பாகும் இப்பொறுப்புக்கள் வர்த்தமானி அறிவித்தல் மூலம் அறிவிப்பதற்கு அரசு நடவடிக்கை எடுத்துள்ளது.. | அரச கரும மொழிக் கொள்கையை பயனுறுதி வாய்ந்த முறையில் அமுலாக்கம் செய்வதற்கு ஏற்புடைய அனைத்து அரச நிறுவனங்களும் அவசியமான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். சமாதானத்தை ஐக்கியத்தையும் அடைவதற்கு அரச கரும மொழிக் கொள்கையை நிறைவேற்றுவதற்கு ஏற்புடைய நிறுவனங்கள் மூலம் வசதிகளையும் கூட்டினைப்பையும் ஏற்படுத்த வேண்டும். மேலும், அரச கரும மொழிக் கொள்கையின் அடிப்படைகளை பரிந்துரைப்பதற்கும் அரசியலமைப்பின் மூன்றாம் அத்தியாயத்தில உள்ளடக்கப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு ஒத்திசைவாக அவதானிப்புகளையும் மேற்பார்வையையும் மேற்கொள்வதற்கு அரச கரும மொழிகள் ஆணைக்குழு சாதகமான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். அரச கரும மொழிக் கொள்கையின் பெறுமானங்களை மேம்படுத்துவதும், அதன் அந்தஸ்து சமத்துவம் நடைமுறைப்படுத்தும் உரிமையை ஏற்றுக்கொள்ளுதல்.<br>தொடர்ச்சியாக அவற்றை முன்னெடுத்துச் செல்வதற்கு அவசியமான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.<br>அரச கரும மொழிகள் ஆணைக்குழுவை சுயாதீன ஆணைக்குழுவாக மாற்றியமைத்து ஏற்புடைய அதிகாரிகளினால் அது வலுவாக்கம் பெற வேண்டும். இத்தகைய சுயாதீனமான ஆணைக்குழுவிற்கு மொழிக் கொள்கையை அமுல்படுத்த இணக்கப்பாடு காட்டாத உத்தியோகத்தர்களை வகைப்பொறுப்பிற்கு ஆளாக்க வேண்டும் .<br>எனவே இவற்றிற்கு அதிகாரம் கொண்ட சக்திவாய்ந்த தெளிவான நிறுவனப் பின்னனி ஸ்தாபிக்கப் பட வேண்டும்.<br>மேலும் ஏற்புடைய அதிகாரிகளினால் மாகாண மட்டத்தில் அரச கரும மொழிகள் ஆணைக்குழுக்களை உருவாக்குவதற்கு அவசியமான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். | அரச சேவைகள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு<br>அரச கரும மொழிகள் திணைக்களம்<br>அரச கரும மொழிகள் ஆணைக்குழு<br>தேசிய மொழிக் கல்வி மற்றும் பயிற்சி நிறுவகம். அரச கரும மொழிக்கொள்கையை அமுலாக்கம் செய்யும் அனைத்து பிரதான உத்தியோகத்தர்கள்.<br>அரச நிறுவனங்களில் அரச கரும மொழிக்கொள்கையை அமுலாக்கம் செய்யும் உத்தியோகத்தர்கள். |

| | | | |
|---|---|---|---|
| பயங்கரவாதத் தடைச் சட்டத்தையும் அதற்கு ஏற்புடைய ஒழுங்கு விதிகள் போன்ற ஏனைய துணைச் சட்டங்களையும் அமுல்படுத்துகையில் தற்போதைய முறையற்ற பயன்பாடுகளுக்குரிய மறை சக்தி காரணமாக வன்முறைத் தீவிரவாதத்திற்கு அடிப்படையான காரணங்கள் மீண்டும் மீண்டும் உருவாகி வருகின்றன. இது வன்முறையை மென்மேலும் ஊக்குவிக்கிறது. இதனூடாக சமூகங்களிலும் மக்கள் பிரிவினரிடையேயும் உள்ள உறவு மேலும் விரிசலாகக் கூடிய அதே சமயம் தேசிய ஐக்கியம் தொடர்பாகவும், குறுகிய கால மற்றும் நீண்டகால விளைவுகளுக்கும் காரணமாக அமைகின்றன.<br><br>அதற்கு மேலதிகமாக, இத்தகைய சட்ட நிலைமைகளின் கீழ் சமூக / பொருளாதார மற்றும் தநிநபர் உளவியல் தாக்கங்கள் பற்றிய மதிப்பாய்வு மற்றும் பிரஜைகளினதும், அவர்களுடைய குடும்பத்தினரினதும், சமூகத்தின் அடிப்படை உரிமைகளும் ஏனைய சுதந்திரங்களும் மீறப்படுகின்றன. இதன் மூலம் இலங்கையின் சட்ட முறைமை மற்றும் சட்டத்தின் ஆட்சி நேர்மைத் திறன் என்பன பாதிக்கப்படுகின்றன. அதே சமயம் வன்முறைத் தீவிரவாதத்தை தடுக்கும் போது இவை அனைத்தும் கவனத்தில் எடுக்க வேண்டும். | 1979 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் (தற்காலிக ஏற்பாடுகள்) கீழ் ஜனாதிபதியினால் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள ஒழுங்கு விதிகள், 2021 மார்ச் 12 ஆம் திகதிய இல.2218/68 அதிவிசேட வர்த்தமான அறிவித்தல், "பயங்கரவாதத் தடைச்சட்டம் (தீவிரவாத மதக் கருத்தியலை வகிப்பதிலிருந்து விடுவித்துக்கொள்ளும்) 2021 இல.01 என்னும் ஒழுங்குவிதிகள்" எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. "கூறப்படும் அல்லது வாசிப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள சொற்களினால் அல்லது சைகைகளினால் அல்லது கட்புல காட்சிகளைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அல்லது வேறு வகையில் பயங்கரவாத நடவடிக்கைகளை அல்லது நானாவித மக்கள் பிரிவினரை அல்லது மதப் பிரிவினரிடையே மத ரீதியான இன ரீதியான அல்லது இனவாத கருத்துக்களை பரப்புதல் அல்லது பகைமை உணர்வுகளை ஏற்படுத்தக்கூடிய அல்லது அவ்வாறு ஏற்படுவதற்கு வழிவகுக்கும் அல்லது அத்தகைய நபர் செயற்படுவார் என சந்தேகிக்கப்படும் ஆளொருவர் தஞ்சம் புகும் அல்லது கைது செய்யப்படும் சந்தர்ப்பத்தில்" இந்தக் கட்டளைகளுக்கான ஏற்பாடுகளுக்கு அமைய புனர்வாழ்வு நடவடிக்கைகளுக்காக அந்நபரை ஈடுபடுத்த முடியும். | வன்முறைத் தீவிரவாத நடவடிக்கைகள், பயங்கரவாதத்தைத் தடுத்தல், எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் மற்றும் பேரணிகள் போன்ற துறைகளில் சட்ட ரீதியான சட்ட கங்கள் மீது தாக்கத்தை ஏற்படுத்தும் சட்டங்கள், ஒழுங்குவிதிகள் நிறைவேற்றுக் கட்டளைகள் மற்றும் வேறு நிர்வாக அல்லது சட்டவாக்க ஏற்பாடுகளைத் தயாரித்தல், வலுவாக்கம் பெறச் செய்தல். மற்றும் அத்தகைய சட்டங்களை வலுவாக்கம் பெறச் செய்தல் போன்ற ஒட்டுமொத்தமான சட்ட நடவடிக்கைகளை மறுசீரமைப்புக்களை உள்ளடக்கிய அம்சங்கள் என்ற வகையில் அவற்றிற்கு ஏற்புடைய அனைத்து இடைநேர்விளைவுகளை கவனத்தில் கொண்டு நடைமுறைப்படுத்த விருக்கும் சட்டங்களை தயாரிப்பதற்கு அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும். இத்தகைய ஏற்பாடுகளைத் தயாரிக்கும் போது, அவற்றினூடாக தாக்கத்திற்குள்ளான பிரஜைகளின் அடிப்படை உரிமைகள் மற்றும் சுதந்திரம் பற்றிய முழுமையான பகுப்பாய்வு உள்ளடக்கப்பட வேண்டும். அதே சமயம் அவற்றை வலுவாக்கம் செய்வதற்கு முன்னர் பரந்துபட்ட சமூக கலந்துரையாடல் மற்றும் கருத்துக்களை கவனத்திற்கொண்டு அவை உள்ளடக்கப் பட வேண்டும்.<br><br>இத்தகைய சட்டங்கள் மற்றும் ஒழுங்கு விதிகள் தயாரிக்கப்படும் போது ஏற்படக் கூடிய சமூகப் பொருளாதார மற்றும் உளவியல் ரீதியான அழுத்தங்களையும் அவற்றிற்கான ஆகு செலவுகளையும் மதிப்பீடு செய்வதற்கும் தேசிய சகவாழ்வை சமூக ஒருங்கிணைப்பை போஷிக்கக்கூடிய சூழமைவில் தகைமை அற்ற ஏற்பாடுகளை நீக்குவதற்கும் அவசியமான நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ள வேண்டும். | அரசாங்கத்தின் நிறைவேற்றுத் துறை, சட்ட வரைஞர்கள், கொள்கை வகுப்பாளர்கள் ஆலோசனை நிறுவனங்கள், சட்டமா அதிபர் திணைக்களம், சட்டத்தை வலுவாக்கம் செய்யும் அதிகாரிகள் மற்றும் நீதித்துறை. |

| | | | |
|---|---|---|---|
| சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் பற்றிய சர்வதேச சமவாயம் போன்ற மனித உரிமைகளுடன் கடப்பாடு கொண்டுள்ள சர்வதேச பொறிமுறைகளில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளை அனுசரிப்பதற்கு, அரசு காட்டும் அர்ப்பணிப்பு சட்டபூர்வமான நிலைமைக்கு உட்படுத்தி உள்நாட்டு ரீதியில் நடைமுறையிலுள்ள கொள்கை ரீதியான ஏற்பாடுகள் உரிய முறையில் செயற்படுத்தப்படாமை.<br><br>நல்லிணக்கம் மற்றும் சமூக ஒருங்கிணைப்பு என்பவற்றை மேம்படுத்துவதற்கும் வன்முறைத் தீவிரவாதத்திற்குக் காரணமாக அமையும் மறைசக்தி கொண்ட மூல காரணங்களையும் வேருடன் களைந்தெறிவதற்கு எதிர்பார்க்கும் ஏற்புடைய சட்டங்களை அமுல்படுத்தும் இடைவெளி நிலவுவது, இலங்கையின் சூழமைவுக்குள் நிலவும் ஒரு பொதுவான நிலைமையாகும். எவ்வித அச்சமும் இன்றி சமூகத்தின் வாழ்வையும் ஆதனங்களையும் பாரிய அளவில் அழிவுக்குட்படுத்துவதற்கு வன்முறைத் தீவிரவாதத்தின் நடவடிக்கைகளைக் குழப்புவது அது கட்டாயமாக மட்டுப்பாடு அற்ற ஒரு வாய்ப்பினை ஏற்படுத்துகிறது. | 2007 ஆம் ஆண்டின் 56 ஆம் இலக்க சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் பற்றிய சர்வதேச சமவாயம் (ICCPR) சட்டத்தின் இல 3(1) வாசகத்தில் குறிப்பிடப்படுவதாவது, “எந்தவொரு நபரும் யுத்தத்தை மேம்படுத்துவதை முன்னெடுக்கக் கூடாது. அதே சமயம் பாரபட்சமான கவனிப்பு, பகைமை அல்லது வன்முறையைத் தூண்டும் தேசிய, இனத்துவ அல்லது மதப் பகைமை சார்பில் தோற்றக்கூடாது. மேலும் மூன்றாவது வாசகத்தின் (2) மற்றும் (3) போன்ற துணை வாசகங்கள் (1) போன்ற உப வாசகங்கள் வரையுள்ள நடவடிக்கைகளை மேற்கொள்ளும் ஆட்கள் குற்றச் செயலை புரிபவராக சுட்டிக் காட்டுவதற்கு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. | பாரபட்சமான கவனித்தல் மற்றும் வன்முறை மீது ஒரு தூண்டுதலை ஏற்படுத்தக்கூடிய நடவடிக்கைகளைத் தடை செய்வதற்கு, சட்டத்தை அமுல்படுத்தும் அதிகாரிகள் தற்போதுள்ள சட்ட ஏற்பாடுகளை உரிய முறையில் செயற்படுத்த வேண்டும். | இலங்கைச் சட்டங்களை அமுலாக்கும் நிறுவனங்களின் அதிகாரிகளும் நீதித் துறைகளும் |
| அரசியலமைப்பு ரீதியாக உத்தரவாதப்படுத்தப் பட்டுள்ள பாரபட்சமான கவனிப்பிற்கான ஏற்பாடுகளை வலுவாக்கம் செய்யும் குறைநிலைமைக்கு மேலதிகமாக, பன்மைத்துவ காலாசார சமூகத்தின் சமூக கலாசார உரிமைகளை பாதுகாத்தல் மற்றும் மேம்படுத்தல் தொடர்பான விடயங்களை உத்தரவாதப்படுத்துவதற்கு உரிய நடவடிக்கைகளை தொடர்ச்சியாக மேற்கொள்வதை கவனிக்காது விடின் அத்தகைய உரிமைகளை உத்தரவாதம் செய்யும் முறையான பாதகமான நடவடிக்கைகள் இல்லாமை | பொருளாதார, சமூக மற்றும் கலாசார உரிமைகள் பற்றிய சர்வதேச சமவாயத்தின் II ஆம் பிரிவின் (2) வது வாசகத்தில் குறிப்பிட்டுள்ளவாறு, “நிறம், பால் நிலை, மொழி, மதம், அரசியல் அல்லது வேறு கருத்துக்கள் தேசிய அல்லது சமூகத் தோற்றம், ஆதனம், பிறப்பு அல்லது வேறு நிலைமை மீது எந்தவொரு நபரும் எவ்வகையிலும் பாரபட்சத்திற்கு ஆளாக்கக் கூடாது. குறித்துரைக்கப்பட்ட அரசுகளால் நடவடிக்கை எடுக்க வேண்டும். | பன்மைத்துவ கலாசார பின்னணியை பிரதிநிதித்துவப்படுத்தும் தனிநபர்கள் பாரபட்சமான கவனிப்பற்ற சமூக மற்றும் கலாசார உரிமைகள் சமத்துவமாக அனுபவிப்பதை உத்தரவாதப்படுத்துவதற்கு அவசியமான நடவடிக்கைகள் ஏற்புடைய அரச நிறுவனங்களின் மூலம் மேற்கொள்ள வேண்டும். | நாட்டின் சட்டத்தை அமுல்படுத்தும் நிறுவனங்கள், அதிகாரிகள் மற்றும் நீதித்துறை. |

| அடிப்படைக் கவனயீர்ப்பு : ஆரம்ப நிலை, இரண்டாம் நிலை மற்றும் உயர் நிலைக் கல்வி | | | |
|---|---|---|---|
| இலங்கையின் பன்மைத்துவ கலாச்சாரம் மக்கள் பரிணாமம் பற்றிய அறிவு மற்றும் புரிதல் என்பவற்றை கட்டியெழுப்பும் உபாயமார்க்க சட்டகங்களைப் போதியளவு விபரமாக ஆரம்ப நிலை, இரண்டாம் நிலை, கல்வி முறையில் உள்ளடக்கப்படவில்லை.<br><br>மேலும், பாடசாலை பாடவிதானத்தை மறு சீரமைக்கும் நடவடிக்கைகளின் போது பன்மைத்துவம் மற்றும் மாற்றுக் கருத்துக்களின் விழுமியங்களின் மீது மதிப்பளிப்பதற்கும் மேம்படுத்துவதற்கும் அதன் மூலம் தேசிய சகவாழ்வையும் ஐக்கியத்தையும் கட்டியெழுப்புவதற்கு ஆரம்ப நிலை மற்றும் இரண்டாம் நிலை கல்விக்கு ஏற்புடைய மாணவர்களினதும் ஆசிரியர்களினதும் மறைசக்தியை மேம்படுத்துவதற்கு பயன்படுத்தும் திட்டங்கள் போதியளவு உள்ளடக்கப்பட வில்லை.<br><br>வன்முறைத் தீவிரவாதம் ஏற்படக்கூடிய அடிப்படைக் காரணிகளை நீக்குவது பற்றி கொள்கை ரீதியான நிலைப்பாடுகளையும் உபாய மார்க்கங்களையும், சமூக சகவாழ்வையும் மேம்படுத்தும் செயற்பாட்டு ரீதியான திட்டங்கள் பற்றி ஆசிரியர்களுக்கு உரிய விழிப்புணர்வு மேற்கொள்ளப்படாததால் குறிப்பாக கவனிக்கத்தக்க ஒரு பிரச்சினையாக அடையாளம் காணப்பட்டுள்ளது. நல்லிணக்கம், சமூக ஒருங்கிணைப்பு என்பன மீது ஆசிரியர்களின் இனத்துவ மற்றும் மதங்களை மையப்படுத்திய பாதகமான தாக்கங்களைப் பற்றி கல்வி அதிகாரிகள் போதியளவு கவனத்தைச் செலுத்தவில்லை. இது ஒரு அடிப்படைப் பிரச்சினையாக உள்ளது. | இலங்கையின் கல்விக் கொள்கையையும் அதனை பிரயோக ரீதியாக நடைமுறைப்படுத்தல் பற்றியும் கல்வி அமைச்சு அடிப்படையில் பொறுப்புக் கூற வேண்டும்.<br><br>1985 இன் 28 ஆம் இலக்க தேசிய கல்வி நிறுவனச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைய, இலங்கையின் தேசிய கல்வி நிறுவகம் (NIE) கல்வி முகாமையாளர்களினதும் ஆசிரியர் கல்வி ஆலோசகர்களினதும் ஆசிரியர்களினதும் ஆற்றல் மேம்பாட்டை உத்தரவாதப் படுத்துதல், பாடசாலைப் பாடவிதான மற்றும் கொள்கைத் திட்டமிடலின் போது உரிய ஏற்புடைய ஆராய்ச்சிகளை முன்னெடுத்தல், மற்றும் அபிவிருத்தி செய்தல் மூலம், பன்மைத்துவ சமூகத்தின் சமத்துவம் மற்றும் ஏற்கனவே நிலவும் சமூக பின்னணிக்கு ஏற்ப கல்வியை அபிவிருத்தி செய்வதற்கு தலைமைத்துவம் வழங்குதல் போன்ற அவசியமான உட்கட்டமைப்பை சுட்டிக்காட்டியுள்ளது.<br><br>கல்விக்கொள்கையின் காலத்திற்கேற்ற இருப்பை உத்தரவாதப்படுத்துதல் மற்றும் கல்வி முறைமைக்கு பதிலிறுக்கும் வகையில் அனைத்துத் துறைகளும் கல்விக் கொள்கை பற்றி ஜனாதிபதிக்கு பரிந்துரைகள் வழங்கும் ஆணையுடன் 1991ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கல்வி ஆணைக்குழுச் சட்டத்தின் கீழ் ஸ்தாபிக்கப்பட்டுள்ள தேசிய கல்வித் ஆணைக்குழுவிற்கு அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளன. | நானாவித இனத்துவ மற்றும் மதம்சார் கலாசாரங்கள் பற்றிய அறிவு மற்றும் புரிதலை உருவாக்கும் பாடவிடயங்கள், ஏற்கெனவே அமுலில் உள்ள ஒரு பாடவிடயத்திற்கோ அல்லது தகுதியான பாட விடயங்களுக்கு அல்லது இணைத்துக்கொள்ளுதல் அல்லது புதிதாக சேர்த்துக்கொள்வதற்கு ஆரம்ப நிலை மற்றும் இரண்டாம் நிலை கல்வித் துறையின் மறுசீரமைப்புத் தேவைகள் அவசியப்படுகின்றன. இதற்கமைய பாடசாலைப் பாட விடயங்களை மறுசீரமைப்பது மூலம் பன்மைத்துவத்தினதும் மாற்றுக் கருத்துக்களினதும் விழுமியங்கள் மீது ஓர் கௌரவம் ஏற்படுகிறது.<br><br>மேலும், இத்தகைய எந்தவொரு செயற்பாட்டிற்கும் கலை, விளையாட்டுக்கள், பொழுதுபோக்கு ரசனை மற்றும் ஓய்வு நிலை என்பன உட்பட நிகழ்காலத்தில் உள்ள பாடவிடயங்கள் மற்றும் பாட விடயங்களுக்கு புறம்பாகவுள்ள செயற்பாடுகளின் உள்ளடக்கம் நிரந்தர பாட விடயங்கள் பற்றிய பரந்துபட்ட மதிப்பீட்டையும் மீளாய்வையும் உள்ளடக்க வேண்டும். அதே சமயம் பொதுவான பயன்பாடு, பரஸ்பரம் புரிந்துணர்வு, நம்பிக்கை, தன்னபிமானம், அர்ப்பணிப்பு மற்றும் சிருஷ்டிகரத் தன்மை ஆகிய பண்புகளை மேம்படுத்தும் வகையில் செயற்படுத்தக்கூடிய செயற்பாட்டுத் திட்டத்தை ஸ்தாபித்தல் உத்தரவாதப்படுத்தல் வேண்டும்.<br><br>தேசிய மற்றும் மாகாண மட்டத்தில் பாடசாலைகளுக்கு வருடாந்தம் "தேசிய பன்மைத்துவ கலாசார நிகழ்ச்சித் திட்டத்தை ஸ்தாபிப்பதற்கு ஏற்புடைய அதிகாரிகளால் | சமூகம் தொடர்பாக இணைந்து செயற்படுதல். |

| | | | |
|---|---|---|---|
| | | நடவடிக்கை எடுக்க வேண்டும். நியாயமான மற்றும் அனைவரையும் உள்ளடக்கிய சமூகம் ஒன்றைக் கட்டியெழுப்புவதற்கு பொறுமையையும் கலாசாரங்களுக்கிடையேயான அறிவு மற்றும் புரிதல் என்பவற்றை மேம்படுத்துவதற்கு ஏற்புடைய தரப்பினரோடு முறைசாரா வகையில் மேற்கொள்ளும் பகுப்பாய்வு ரீதியான ஆலோசனை நடவடிக்கைகளுடனான அத்தகைய நிகழ்ச்சித் திட்டத்தை திட்டமிட்டு ஆரம்பித்தல் வேண்டும். உதாரணமாக, அனைத்துப் பிள்ளைகளுக்கும் சமயம் தொடர்பான பாட விடயத்தில் 30 வீதம் ஏனைய மதங்களைப் பற்றிய முக்கிய போதனைகளையும் உள்ளடக்கக்கூடிய வகையில் பாடவிதானம் அமைய வேண்டும.<br><br>கல்வி முறைமையில் மிக முக்கியமான மனப்பாங்குகளினாலான உபாயமார்க்கத்தை தயாரிப்பதற்கு நேர்மையான அரசியல் அர்ப்பணிப்பும் திடசங்கட்பமும் கொண்ட அரசின் இடையீடு அவசியமான அதிகாரிகளால் ஆராயப்பட வேண்டும்.<br><br>கல்வி அமைச்சு, தேசிய கல்வி ஆணைக்குழுவுடன் ஒன்றிணைந்து தேசிய கல்விக் கொள்கையை அமுலாக்கும் மந்த கதியான முன்னேற்றம் கருதி பயனுறுதிவாய்ந்த மேற்படிக் கொள்கையை அமுலாக்கும் வகையில் உபாயமார்க்கங்கள் தயாரிக்கப்பட வேண்டும். அதிகாரிகளினால் தேசிய கல்வி ஆணைக்குழுவின் நிர்வாக ஆற்றல், சுயாதீனம், அதிகாரங்கள் என்பன மேலும் பலப்படுத்தப்பட வேண்டும். அதன் அதிகாரங்கள் ஜனாதிபதிக்கு ஆலோசனை வழங்குவதற்கு மாத்திரம் மட்டுப்படுத்தப்படாது கல்வித்துறையின் ஏனைய நிறுவனங்களும் ஏற்புடைய வகையில் விரிவாக்கப்பட வேண்டும். | |

| | | | |
|---|---|---|---|
| நாட்டின் உயர்கல்வித் துறையில் அமைந்துள்ள பல்கலைக்கழகங்களும் தொழில்பயிற்சி நிறுவனங்களும் டிப்ளோமாக சான்றிதழ் வழங்கும் நிறுவனங்களும் கல்வியியல் கல்லூரிகளும் ஆசிரியர்களினதும் மனப்பாங்குகளை மேம்படுத்துவதிலும், இனத்துவ மற்றும் மதம்சார் கருத்தியல் தாக்கங்கள் கட்டாயமாக சமூக சகவாழ்விற்கு பாதகமாகவே அமைந்துள்ளன.<br><br>பன்மைத்துவ கலாசார சமூகத்தில் நல்லிணக்கத்திற்கும் சகவாழ்விற்கும் நேரடியாகத் தாக்கத்தை செலுத்தும் இத்தகைய முரண் நிலைகளின் பின் விளைவுகள் இனத்துவ மற்றும் மதம்சார் பரஸ்பர புரிந்துணர்வை மேம்படுத்தும் உயர்கல்வி நிறுவனங்களின் இளைஞர்களது கலாசார அடையாளங்கள் பற்றிய புரிதலை மேம்படுத்தும் முறைமைகளுக்கு ஏற்ப பாட நெறிகளை உள்ளடக்க வேண்டும். அதற்கு அப்பால் உரிய உபாயமார்க்க நடவடிக்கைகளுக்குரிய செயற்திட்டங்களை ஸ்தாபிக்க முடியாமை தற்போதைய சிக்கலான நிலைமையை மேலும் உக்கிரமடையச் செய்துள்ளது. | இலங்கையின் உயர்கல்வி நிறுவனங்களில் இருந்து வெளியேறும் இளைஞர் சமூகம் மூன்று வகையான அடிப்படைகளைக் கொண்ட சமூக, சுற்றாடல் சார்ந்த நிதி சார்ந்த துறைகளின் சமூகத்தின் பிரதிபலிப்பாகும். இவர்களில் பண்பு ரீதியான மாற்றத்தை ஏற்படுத்துவதற்கு அவசியமான நிறுவன ரீதியான அதிகாரங்களை உயர் கல்வி அமைச்சும் அதனோடு இணைந்த நிறுவனச் சட்டகங்களுக்கு ஏற்புடையவாறு, பிரதானமாக பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு மற்றும் தேசிய கல்வி ஆணைக்குழு என்பவற்றிற்கு உண்டு. இதற்கு மேலதிகமாக, 1990 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க 3ஆம் நிலை மற்றும் தொழிற்கல்விச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைய, நாட்டில் கொள்கை வகுப்பு, திட்டமிடல், தர நிர்ணயங்களை மதிப்பீடு செய்தல், கூட்டிணைத்தல் மற்றும் அபிவிருத்திக்குத் தேவையான நடவடிக்கைகளை எடுப்பதற்கு 3 ஆம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவிற்கும் அதிகாரம் உண்டு. | தேசிய கல்வி ஆணைக்குழுவினால் சமர்ப்பிக்கப்பட்ட இலங்கையின் உயர் கல்வி தொடர்பான தேசிய கொள்கை முன்மொழிவுகளின் (2019 டிசம்பர்) குறிக்கோள்களுக்கு அமைய அதிகாரிகளால் தற்போதைய உயர்கல்வி முறைமை பற்றிய பரந்துபட்ட மீளாய்வு மேற்கொள்ளப்பட வேண்டும். உயர்கல்வி நிறுவனங்களில் "ஜனநாயக முறைமையை அனுசரிக்கும் பொறுப்பு வாய்ந்த பிரஜைகளை உருவாக்குவதற்கு பன்முகத் தன்மை, பல்வகைமை சமுதாயத்தில் ஐக்கியத்தைப் பேணுதல், மனித ஒத்துழைப்பின் ஒழுக்கவியல் நெறிமுறைகள் மீது சமூகம் விழிப்புணர்வு அடைந்திருத்தல் கூருணர்வை மேம்படுத்தக்கூடிய நிகழ்ச்சித்திட்டங்களை ஸ்தாபித்தல் மற்றும் அமுல்படுத்தல் என்பவற்றிற்கு அவசியமான புதிய அணுகுமுறைகளை அறிமுகம் செய்வதற்கு கல்வி அறிவுடைய அதிகாரிகள் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும்.<br><br>பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு மற்றும் உயர்கல்வி தொடர்பான ஏனைய அரச நிறுவனங்கள் அவற்றின் தொலைநோக்கு, செயற்பணி மற்றும் குறிக்கோள்களுக்கு அமைவாக "நாட்டின் தேசிய ஐக்கியம் சமூக சகவாழ்வு என்பவை மீது அதிக ஆர்வம் காட்டும் அறிவுசார் தலைவர்கள் அவர்களுடைய நிறுவனத்தின் அங்கங்களாக பிரவேசிக்க வேண்டும்" என்ற அம்சம் தெளிவாக உள்ளடக்கக்கூடிய வகையில் தொலைநோக்கும் பணிகளும் மாற்றியமைக்கப்பட வேண்டும்.<br><br>உயர்கல்வி அமைச்சு இளைஞர் விவகார மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சு, | தேசிய கல்வி ஆணைக்குழு, தொழில்சார் கல்வி ஆணைக்குழு, பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு மற்றும் உயர் கல்வி சார் தொடர்புடைய அதிகாரம் படைத்த ஏனைய நிறுவனங்களுடன் பரஸ்பர புரிதலுடன் உரிய தொடர்பாடலுடன் செயற்படுதல். |

**அடிப்படைக் கவனயீர்ப்பு : தேசிய இளைஞர் கொள்கை மற்றும் இளைஞர்கள், சமாதானம்; பாதுகாப்பு என்பன பற்றிய ஐக்கிய நாடுகளின் முன்மொழிவுகள்**

| | | | |
|---|---|---|---|
| இளைஞர் ஒன்றியங்களின் (உதா: இளைஞர் பாராளுமன்றம் சமத்துவத்துடனான கவனிப்பு மற்றும் நியாயமான வாய்ப்புகள் பற்றி திருப்தியடைய முடியாது என்ற கருத்தியல் பற்றிய பிரச்சனை மற்றும் வன்முறைத் தீவிரவாதத்தைத் தடுப்பதற்கான இளைஞர்களின் மறை சக்தி பாராட்டக்கூடிய வகையில் பயன்படுத்தாமை ஆகிய சூழமைவுகளில் இளைஞர் சமூகத்தின் கருத்துக்களும் யோசனைகளும் முன்வைக்கக்கூடிய தேசிய மட்டத்திலான ஓர் அரங்கு இல்லாமை.<br><br>கொள்கை வகுப்பு நடவடிக்கைகளுக்காக இளைஞர்களின் பயனுறுதிவாய்ந்த, ஒழுங்கு முறையான, அர்த்தபுஷ்டியான பங்கேற்பு இன்மை. நாட்டின் தற்போதைய கொள்கை சார் கலந்துரையாடலின்போது குறிப்பிடத்தக்க வெற்றிடமே காணப்படுகிறது. அத்தகைய ஒன்றியங்களை பிரதிநிதித்துவப்படுத்துவதற்கு கட்சி சார்பற்ற, சமவாய்ப்புக்கள் இல்லாமை மற்றும் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனப் பொறிமுறையை உள்ளடக்கிய கொள்கை வகுப்பு செயற்பாடுகளுக்கான நேர்மையான அரசியல் அர்ப்பணிப்புடனான திடசங்கட்பம் இல்லாமை. இளைஞர் சமூகத்தின் குரலை பொருட்படுத்தாமைக்கு காரணமாக அமைந்துள்ளது. | **தேசிய இளைஞர் கொள்கை - 2014**<br><br>6வது அத்தியாயம் : தேசிய இளைஞர் கொள்கையின் பிரதான உபாயமார்க்கங்களும் கொள்கை ரீதியான இடையீடு பற்றிய பிரிவின் மூலமும் சமூகத்தை வெளியேற்றுதல். மற்றும் பாரபட்சமான கவனிப்பிற்கான தீர்விற்கு உடனடியான கொள்கை ரீதியான இடையீடுகளின் அவசியம் வலியுறுத்தப்படுகின்றது. இளைஞர் விவகாரங்கள் பற்றிய குறைகேள் அதிகாரி (ஒம்புட்ஸ்மன்) பதவியை ஸ்தாபிப்பதற்கும் அமுலாக்குவதற்குமான முன்மொழிவு. இக் கொள்கையில் உள்ளடக்கப்படுவதோடு தேசிய மட்டத்தில் இளைஞர்களின் யுவதிகளின் அர்த்தபுஷ்டியுள்ள பங்கேற்பிற்கு மிகச் சிறந்த வாய்ப்பையும் வெளியையும் நிர்மாணிக்கும் அவசியம். இதன் மூலம் மீண்டும் கவனம் செலுத்தப்படுகிறது.<br><br>“இளைஞர்கள், சமாதானத்தையும் பாதுகாப்பையும் பற்றிய ஐக்கிய நாடுகளின் பாதுகாப்புச் சபைக்கான 2250க்கான பிரேரணை”<br><br>“நானாவித சமூக பின்னணியிலுள்ள இளைஞர்களும் யுவதிகளும், இளம் செயற்பாட்டாளர்களும் அடையாளம் காணப்பட்டு வன்முறையைத் தவிர்க்கும் நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்பட வேண்டும். சமூக சகவாழ்வை மேம்படுத்துவதற்கு ஒத்துழைப்பைப் பெறுவதற்கு போதியளவு பின்னணியைத் தயாரிக்கக் கூடிய சூழ்நிலையையும் வசதிகளையும் ஏற்படுத்துமாறு உரிய தரப்பு அரசுகளிடம் கோரப்படுகிறது.” | தேசிய இளைஞர் கொள்கைகளுக்கான பிரேரணைகளுடன் இணங்கும் கொள்கை யோசனைகளுக்கு நடவடிக்கைகளையும் செயல்திறனையும் மதிப்பீடு செய்தல். மதிப்பீட்டிற்கு இளைஞர் விவகார விளையாட்டுத் துறை அமைச்சு சுயாதீனமான ஒரு குழுவை நியமிக்க வேண்டும். இதற்கமைய, பரிந்துரைகளை அமுலாக்குவதற்கு போதிய உட்கட்டமைப்பு வசதிகளையும் பேர் குறித்துரைக்கப்பட்ட உத்தியோகத்தர்களினது பொறுப்புக்கள் உள்ளடக்கப்பட்ட மேற்பார்வை மற்றும் மதிப்பாய்வுப் பொறிமுறை திட்டமிடப்பட வேண்டும்.<br><br>இளைஞர் மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சு உயர்கல்வி நிறுவனங்கள் மாணவர் சங்கங்கள் மற்றும் இளைஞர் கழக ஒன்றியங்கள் என்பவற்றுடன் நெருக்கமாகவும் ஒத்துழைப்புடனும் செயற்பட வேண்டும். அதே சமயம் சமூக சகவாழ்விற்கு ஏற்புடைய நிகழ்ச்சித்திட்டங்களை அர்த்த புஷ்டியுள்ளவாறு திட்டமிடும் போது ஏனைய விடயங்களோடு தேசிய சகவாழ்வு குறிக்கோள்களை மேம்படுத்தும் கொள்கையையும் நிலைப்பாட்டையும் உள்ளடக்கிய நிகழ்ச்சித்திட்டங்கள் செயற்படுத்தப்பட வேண்டும். இதன் போது இளைஞர்களுடன் தொடர்புகொள்ளக்கூடிய சகல சந்தர்ப்பங்களையும் ஆய்வு செய்து பயன்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். | இளைஞர் விவகார மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சு முக்கிய பொறுப்பை வகிக்கின்றது. |

| | | | |
|---|---|---|---|
| அமைச்சரவை அமைச்சு அந்தஸ்துள்ள அமைச்சுப் பதவியான இளைஞர் விவகார மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சின் கீழ் தேசிய இளைஞர் சேவை பேரவையின் ஒரு விழுமியமாக, “பன்மைத்துவ கலாசாரங்களை உள்ளடக்கிய ஒரு மனிதக் குழுமமாக இளைஞர்களிடையே பன்மைத்துவக் கலாசாரப் புரிதல் மற்றும் நல்லெண்ணம் தொடர்ச்சியாக மேம்படுத்தக் கூடிய வகையில் செயற்படுங்கள்“ என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.<br><br>எவ்வாறாயினும், இளைஞர்களுக்கிடையேயான புரிந்துணர்வை பயனுறுதிவாய்ந்த முறையில் பயன்படுத்துவதற்கு மேற்கொள்ளும் சாதகமான முயற்சியில்லாத பின்னணியின் கீழ், பன்மைத்துவ மற்றும் மதங்களுக்கிடையேயான ஒத்துழைப்புக்கு உயிரூட்டுவதை மேம்படுத்துதல்.<br><br>கலை மற்றும் விளையாட்டுத் துறை பற்றிய அவர்களுடைய பகுப்பாய்வை கவனத்தில் எடுக்காமை, இலங்கையின் பன்மைத்துவ சமூக சூழமைவில் உள்ள பிரதான சவால் ஆகும். இதற்கு மேலதிகமாக, கலைத்துவமாக தயாரிக்கப்பட்ட தீவிரவாதக் கருத்தியலை சமூக மயப்படுத்துவதற்கு உருவாகியுள்ள அதே நேரம், (உதாரணம் சினிமா, தொலைக்காட்சி நாடகங்கள், பாடல்கள் ஆகியவற்றினூடாக) அவை ஒரு சமூகத்திற்கு சாதகமாக அமைவதோடு மற்றுமொரு சமூகத்தற்கு பாதிப்பை ஏற்படுத்தக்கூடிய வகையில் வன்முறைத் தீவிரவாதம் மீது சமூகத்தை அணிதிரட்டுவதற்கு ஏதுவாக அமையலாம். அதற்கு மேலதிகமாக, பயனுறுதிவாய்ந்த | **தேசிய இளைஞர் விவகாரக் கொள்கை**<br><br>தேசிய இளைஞர் கொள்கையின் குறிக்கோள்கள் இலக்கம் 3.3 ஐ மீண்டும் வலியுறுத்தப்படுகின்றது. அது இந்நாட்டின் இனத்துவம், கலாசாரம், மதம், மொழி மற்றும் வாழ்க்கைக் கோலங்களின் பன்மைத்துவத்தின் அடையாளங்களை அடையாளம் கண்டு அவற்றை கௌரவிக்கும் அதேவேளை இளைஞர் யுவதிகளிடையே சமூகப் பொறுப்பு மற்றும் சமூக சகவாழ்வு பற்றிய உணர்வை ஏற்படுத்துவது அத்தியாவசியமாகும்.<br><br>மாற்றமும் பன்மைத்துவமும் பற்றிய சிக்கல்கள் பற்றி இளைஞர்களிடையேயான புரிதலை மேம்படுத்துவது மூலம் அதன் குறிக்கோள்களை தொடர்ந்தும் விஸ்தரிக்க வேண்டும். இலங்கைச் சமூகத்தின் நானாவித வரலாறுகள் மற்றும் சம்பிரதாயங்கள், அனைவராலும் உள்ளடக்கப்படுதலும் சகிப்புத் தன்மையும் சமூகத்தின் சர்வதேச ரீதியான பெறுமானங்கள், ஆன்மீக ரீதியாகவும் நெறிமுறை சார்ந்தும் பெறுமானங்களுக்கு மதிப்பளித்தல், அகிம்சையான கலாசாரம் மற்றும் அனைத்து சமூகங்களுக்குமிடையே மோதல்களுக்கு அமைதியான முறையில் தீர்வு காணுதல் போன்ற வகையிலான நிலைமைகளை இதன் மூலம் ஒரு மேலும் சுட்டிக்காட்டப்பட்டது.<br><br>தேசிய இளைஞர் கொள்கையின் 6 வது அத்தியாயத்தின் கீழ் அடிப்படை உபாயமார்க்கங்கள் மற்றும் கொள்கைகள் இடையீடுகள் மூலம் அமைதிக்கும் நல்லிணக்கத்துமான திட்டங்கள் பரந்துபட்ட முறையில் முன்வைக்கப்படுகின்றன. கல்வி நிறுவனங்களின் பாடவிடயங்கள் மற்றும் வெளிவாரி நடவடிக்கைகளை வலுப்படுத்துவதற்கும் முன்னேற்றுவதற்கும் கொள்கை ரீதியான இடையீடுகளின் அவசியம் | கலை, விளையாட்டுக்கள் மற்றும் புத்தாக்கத் துறைகளின் இளைஞர் யுவதிகளின் திறமைகள் பயனுறுதிவாய்ந்த முறையில் உபயோகிப்பதற்கு அவற்றிற்கு முன்னுரிமை வழங்குவதற்கு இளைஞர் விவகார மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சினால் புத்த சாசன சமய விவகார கலாசார அமைச்சும் ஏற்புடைய இணைந்த நிறுவனங்களும் ஒன்றிணைந்து ஒத்துழைப்புடன் நடவடிக்கை எடுக்க வேண்டும்.<br><br>வன்முறைத் தீவிரவாதத்தை தடுப்பதற்கும் நல்லிணக்கத்தை மேம்படுத்துவதற்கும் பயனுறுதிவாய்ந்த அனைத்து இனங்களுக்கிடையேயும் இனத்துவ தொடர்புகளை சர்வமத உறவுகளை மற்றும் அனைத்து கலாசாரங்களையும் பரிமாற்றம் செய்யும் செயற்பாடுகளை அல்லது நடவடிக்கைகளை மேம்படுத்துவதற்கு வலுவூட்டுவதற்கு போதியளவு வளப்பகிர்வின் ஊடாக நிறுவன தயாரிப்புடன் இளைஞர் விவகார மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சினால், நீண்ட கால உபாயமார்க்கங்கள் தயாரிக்கப்பட வேண்டும்.<br><br>தேசிய இளைஞர் கொள்கையின் உத்தேச மற்றும் இணக்கப்பாட்டுக் கொள்கைகளும் உடன்பாடு காணப்பட்ட பிரேரணைகளும் நடவடிக்கைகளும் செயல்திறனை மதிப்பிடுவதற்கும் இளைஞர் விவகார விளையாட்டுத் துறை அமைச்சினால் சுயாதீனமான குழு நியமிக்கப்பட வேண்டும். இதற்கமைய, பரிந்துரைகளை அமுல்படுத்துவதற்கு போதிய அளவு உட்கட்டமைப்பு வசதிகளும் மற்றும் பெயர் குறித்துரைக்கப்பட்ட உத்தியோகத்தர்களின் வகைப்பொறுப்பு உள்ளடங்கிய மேற்பார்வை மற்றும் மதிப்பாய்வுப் பொறிமுறையை திட்டமிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | இளைஞர் விவகார விளையாட்டுத் துறை அமைச்சு அடிப்படை பொறுப்பைக் கொண்டுள்ளது,<br><br>புத்தசாசன, மத விவகார மற்றும் கலாசார அமைச்சு, ஊடக அமைச்சு, கல்வி அமைச்சு, உயர் கல்வி அமைச்சு, மற்றும் ஏனைய அனைத்து அரச நிறுவனங்களும்.<br><br>சிவில் சமூக மற்றும் நன்கொடை வழங்கும் நிறுவனங்கள் ஆகிய அனைவரினதும் உள்ளடங்களாக நிகழ்ச்சித்திட்டங்களுக்கும் கொள்கை ரீதியான இடையீடுகளுக்கும் கூடிய முதலீடு செய்ய வேண்டும். நாட்டின் இளைஞர் சமூகத்திற்கு செயற்பாட்டு ரீதியான மற்றும் அர்த்தபுஷ்டியான பங்குபற்றலுக்கு, பிரதிநிதித்துவத்திற்கு, தீர்மானங்களை மேற்கொள்ளும் சந்தர்ப்பத்திற்கு சமமான முறையில் பிரவேசிக்கும் ஆற்றல் அவசியமான வாய்ப்புக்கள் கிடைக்கக்கூடிய வகையில் சுயாதீனமான ஒரு வேலைத்திட்டத்தை திட்டமிட வேண்டும். அதற்கு மேலதிகமாக கொள்கை வகுப்பாளர்களும் செயற்படுத்துவதற்கு இளைஞர்களை உள்ளடக்கிய அணுகு முறை அத்தியாவசியமாகும் என்பதை ஏற்பதற்கு சிவில் சமூகத்தின் ஆதரித்து வாதாடும் நடவடிக்கைகளை தொடர்ச்சியாக முன்னெடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| இனங்களுக்கிடையேயான இனத்துவ இணைப்பு, சர்வமத தொடர்புகள் மற்றும் சர்வ கலாசார பரிமாற்றங்களும் ஏனைய சர்வ சமூக செயற்பாடுகள் என்பன பயன்படுத்துவதில் பலம் வாய்ந்த, போதியளவு வளங்களை வழங்கக்கூடிய நிறுவன ரீதியான தயாரிப்புடன் கூடிய நீண்டகால உபாயமார்க்கங்கள் இல்லாமை வன்முறைத் தீவிரவாதத்தை தடுப்பதற்கான குறிப்பிடத்தக்க தடையாகும். | இதன் மூலம் வலியுறுத்தப்படுவதோடு பாடவிடயத்திற்கு புறம்பான நடவடிக்கைகள், விளையாட்டுக்கள் மற்றும் சிருஷ்டிகரமான தன்மை என்பவற்றை மேம்படுத்தும் சந்தர்ப்பங்கள் போன்ற பொழுது போக்கிற்குரிய வாய்ப்புக்களை அடையாளம் கண்டு மேம்படுத்துதல். நானாவித கலை, மற்றும் கலாசார நடவடிக்கைகளை மேம்படுத்துவதற்கு நிறுவனங்களை அமைத்தல், மற்றும் பாடசாலைகளில் கட்டாயமாக வெளிவாரி நடவடிக்கைகள் பிரதேச ரீதியாகவும் | இனத்துவ மற்றும் மதங்களை மையப்படுத்திய தீவிரவாத கருத்தியலினால் உருப்பெறும் அரசியல் மற்றும் சமூக உரையாடல்களினால் இளைஞர்கள் புறக்கணிக்கப்பட்டு அவர்களின் வரலாற்றையும் கலாசாரத்தையும் பகிர்ந்துகொள்ளக்கூடிய தூதர்களாகக் கருத வேண்டியுள்ளது. அதே சமயம் பல்வேறு சமூகங்கள் சந்தேகங்கள் மற்றும் தெளிவின்மை பற்றிய வேரூன்றிய பிரச்சினைகளை பிடுங்கியெறிவதற்கு தேசிய மட்டத்தில் உபாயமார்க்கம் அல்லது செயற்பாடுகள் திட்டமிடப்பட வேண்டும். | |
| **அடிப்படை கவனயீர்ப்பு : சமூக ஒருங்கிணைப்பு மற்றும் நல்லிணக்கம் பற்றிய நிறுவனச் சட்டகம்** | | | |
| வன்முறைத் தீவிரவாதம் மீண்டும் வெளிப்படுவதற்கு இனத்துவம் மற்றும் சமயங்களை மையமாகக் கொண்ட கருத்தியல் ஊடாக தீர்மானகரமான கடமையை செய்கின்றன. மக்களும் இளைஞர் சமூகமும் எதிர்கொள்ளும் பிரச்சினைகளுக்கு கவனம் செலுத்த வேண்டும். சமூக விடயங்கள், பிரச்சினைகள் மற்றும் சவால்கள் தொடர்பாக செவிசாய்ப்பதற்கு சிறு தீர்வுகளைப் பெற்றுக்கொள்வதற்குத் தகுதியான அரங்கை அல்லது ஒரு கட்டமைப்பை உருவாக்குவதற்கு வாய்ப்புக்களும் கிடையாது. எனவே, இளைஞர்களின் குறிப்பிட்டளவு எண்ணிக்கையினர் இத்திசையில் தள்ளப்படுகின்றனர்.<br><br>சமூகங்கள் மற்றும் தற்போதைய நிறுவன ரீதியான கட்டமைப்புகளுக்கிடையே குறிப்பிடத்தக்க நம்பிக்கை பற்றிய வேறுபாடுகள் சமூகங்களுக்கிடையே பிளவுபடச் செய்யும் உணர்வுகள் | 2015.12.18 ஆம் திகதி கொண்ட இலக்கம் 1945/41 வர்த்தமான அறிவித்தல் மற்றும் தேசிய நல்லிணக்கம் பற்றிய நடவடிக்கைகள் தேசிய ஒருங்கிணைப்பு மற்றும் நல்லிணக்க அமைச்சின் கீழ் தேசிய நல்லிணக்க அலுவலகத்திற்கு ஒப்படைக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், 2020 ஆகஸ்ட் 09 ஆம் திகதிய அதி விசேட வர்த்தமானப் பத்திரிகைக்கேற்ப தேசிய நல்லிணக்கப் பணியகம் நீதி அமைச்சின் விடயப்பரப்பிற்குள் உட்படுத்தப்பட்டது.<br><br>“நானாவித சமூகங்களிடையே காணப்படும் அழுத்தங்கள் மோதல்களுக்குக் காரணமாகும் பிரச்சினைகளைச் தீர்ப்பதற்கான நடவடிக்கைகளைப் பற்றி அரசுக்கு பரிந்துரைகளைச் சமர்ப்பிப்பதற்கும் அத்தகைய நடவடிக்கைகளை அனுசரிப்பதற்கும் கண்காணிப்பதற்கும் “அனைத்து மக்கள் பிரிவினர் மத்தியிலும் சமாதானத்தையும் ஐக்கியத்தையும் நிலைநாட்டுவதற்கு அரசுக்கு பரிந்துரை செய்வதற்கும் | நாட்டில் தற்போது உள்ள அரசியலமைப்பை மறுசீரமைப்பு செய்வது பற்றிய விவாதம் - கலந்துரையாடல் ஊடாக சுயாதீனமான “தேசிய நல்லிணக்க ஆணைக்குழு“ அமைப்பது பற்றிய கூடிய கவனம் செலுத்தப்பட வேண்டும். சமூக சகவாழ்வு, சமூக ஒருங்கிணைப்பு மற்றும் வன்முறைத் தீவிரவாதத்தின், சம்பவங்கள் உட்பட அவற்றிற்கு மாத்திரம் மட்டுப்படாமல் நல்லிணக்க நடவடிக்கைகள் தொடர்பான மனக்குறைகளை திரட்டுவதற்கு இத்தகைய சுயாதீன ஆணைக்குழுவிற்கு அதிகாரம் இருத்தல் வேண்டும். ஏற்புடைய உத்தேச ஆணைக்குழு மூலம் இத்தகைய விடயங்கள் பற்றி ஆராய்ந்து தகுதியான முறையில் அவற்றிற்கு பரிகாரம் காண வேண்டும். வன்முறைத் தீவிரவாதத்திலிருந்து எம்மைப் பாதுகாத்துக் கொள்வதற்கு பன்மைத்துவ கலாசார சமூகம் மற்றும் சமூகத்தின் நல்லாட்சிக்கான இத்தகைய நடவடிக்கைகள் அவசியமாகும். | அரசியலமைப்பு ரீதியான மறுசீரமைப்பு நடவடிக்கைகளின் ஒரு பகுதியாக இத்தகைய சுயாதீன நிறுவனத்தை அமைப்பதற்கு அவசியமான நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ள வேண்டும்.<br><br>வன்முறைத் தீவிரவாதத்தின் விளைவுகளும் அதன் மூலம் ஏற்படக்கூடிய, மீண்டும் யதார்த்த நிலைக்கு மாற்ற முடியாத சமூகப் பொருளாதார மற்றும் அரசியல் துறைகளின் ஆகு செலவு, உதாரணங்களுடன் சுட்டிக்காட்டுவதற்கு சிவில் சமூக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். இதன் மூலம் தீர்வினை வழங்கும் நீண்டகால சுயாதீன நிறுவன ரீதியான கட்டமைப்பிற்கான ஆதரித்தல் வாதாடல் நடவடிக்கைகளை தொடர்ச்சியாக முன்னெடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| மேலும் அதிகரிக்கின்றது. வன்முறைத் தீவிரவாதத்தைத் தூண்டும் காரணிகள் மீது இளைஞர் சமூகங்களை ஆகர்ஷிக்கும் காரணிகளுடன் வன்முறைத் தீவிரவாதத்திற்கான மூலங்களாக ஏனைய காரணிகளுடனான தீர்விற்கான அரசியல் மயப்படுத்தப்படாத நிறுவனக் கட்டமைப்புக்கள் பாதுகாப்பு இன்மையால் தேசிய நல்லிணக்கத்திலும் தேசிய சகவாழ்வு மற்றும் ஐக்கியத்திற்கு இது பாரிய தடையாகும். | கண்காணித்தல் நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கும் நல்லிணக்க நடவடிக்கைகளை உறுதிப்படுத்துவதற்கும் நிகழ்ச்சித் திட்டங்களை தயாரிப்பது போன்ற விடயங்கள் இதன் குறிக்கோளாக அமைந்தன. | இத்தகைய சுயாதீன ஆணைக்குழு பயனுறுதி வாய்ந்த, வினைத்திறன் மற்றும் அர்த்தபுஷ்டியுள்ள செயற்பாட்டிற்கு வசதி வழங்கும் வலுவாக்கம் செய்யக்கூடிய அதிகாரம் படைத்த நிறுவனங்களின் வலுவான சக்தியை பெற வேண்டும். | |
| **அடிப்படை கவனயீர்ப்பு : பிரதான நீரோட்டத்தின் ஊடகங்களும் சமூக ஊடகங்களும்** | | | |
| தகவல்களின் தொகுப்பு மிக வேகமாக இடம்பெறுகின்ற ஒரு பின்னணியில் பிரதான நீரோட்டத்தின் ஊடகங்களும் குறிப்பாக சமூக ஊடகங்களில் பொறுப்பின்றி அறிக்கையிடுவதையும் நெறிமுறைகளுக்கு விரோதமாக நடந்துகொள்வதும், தவறான தகவல்களை சமூகமயப்படுத்தல் மூலமும் உடனடியான வன்முறைத்தீவிரவாத நிலைமைகளை சிருஷ்டிப்பதற்கு தீவிரவாத இனத்துவ அல்லது மதம்சார் கருத்தியலை முன்னிலைப்படுத்தி மேற்கொள்ளும் நடவடிக்கைகள் பிரச்சினைக்குரியவை<br><br>தேர்தல் காலங்களில் ஊடகங்கள் பரந்துபட்ட முறையிலும் எந்தவித ஒழுங்குறுத்தல்களுக்கு கட்டுப்படாமலும் ஊடகப் பயன்பாடு காரணமாக இனத்துவ மதம்சார் மையக் கருத்தியல் ஊடாக கட்டாயமாக மக்களின் உணர்வுகளை மோதல் மார்க்கத்திற்கு ஈடுபடுத்தப்படுகிறது. | 1973 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க தேசிய அரசுப் பேரவையின் இலங்கைப் பத்திரிகைப் பேரவைச் சட்டம் (1973 பெப்ரவரி 27)<br><br>இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் இலக்கம் 162/5 A மற்றும் 1981 ஒக்ரோபர் 14 புதன்கிழமை வர்த்தமானிப் பத்திரிகை<br><br>இலங்கை தேர்தல் ஆணைக்குழுவின் பல்வேறு வர்த்தமானி அறிவித்தல்கள் வெளியிடப்பட்டுள்ளன. இவற்றின் மூலம் தேர்தல் காலங்களில் ஊடகப் பயன்பாட்டை ஒழுங்குறுத்துவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இலங்கை தேர்தல் ஆணைக்குழுவினால் இத்தகைய ஒழுங்குறுத்தல்கள் 104 (5) (அ) உறுப்புரை யின் கீழ் மேற்கொள்ளப்பட்டுள்ள, அரசியற் கட்சிகளும் கட்சி வேட்பாளர்களும் அனுசரிக்க வேண்டிய நெறிமுறைத் தரநியமங்களுக்கு ஏற்ப செயற்படுவதை உத்தரவாதம் செய்ய வேண்டும். இதன் | வன்முறைத் தீவிரவாத நிலைமைகள் ஏற்படும் தன்மை மீது கவனம் செலுத்தப்பட்டு பொறுப்பற்ற ஊடக நடத்தைகளின் தாக்கங்கள் மற்றும் தேசிய ஐக்கியம் மீது அதன் விளைவுகளை மீளாய்வு செய்வதற்கு ஏற்புடைய அதிகாரிகள் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். மேலும், ஊடக அமைச்சு இலங்கைப் பத்திரிகைப் பேரவையுடன் ஒன்றிணைந்து ஏற்புடைய தரப்பினருடன் ஒத்துழைப்புடன் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். அதே சமயம் தேசிய ஊடகக் கொள்கையை தயாரிப்பதற்கு திட்டமிட வேண்டும்.<br><br>தற்போது மேலோங்கியுள்ள சமூக அரசியல் போக்கிற்கு அமைய தேசிய அரசப் பேரவையின் 1973 இன் 5 ஆம் இலக்க இலங்கைப் பத்திரிகைப் பேரவைச் சட்டத்தை செயற்படுத்தும் பயனுறுதிவாய்ந்த தன்மையை, வெகுசன ஊடக அமைச்சு மீளாய்வு செய்ய வேண்டும். | வெகுஜன ஊடக அமைச்சு, இலங்கைப் பத்திரிகைப் பேரவை, இலங்கைத் தேர்தல்கள் ஆணைக்குழு மற்றும் ஏனைய அரச நிறுவனங்கள்.<br><br>பொறுப்பின்றி ஊடகப் பயன்பாட்டிற்கு சமூக அரசியல் மற்றும் பொருளாதார இழப்புக்கள், வன்முறைத் தீவிரவாதத்திற்குள்ள தாக்கங்கள் மற்றும் சமூக சகவாழ்வு, சமாதானம் அதனூடாக உருவாக்கப்படும் எதிர் விளைவுகளை உறுதிப்படுத்தும் ஆட்சிகளை அடிப்படையாகக் கொண்ட தரவுகள் மற்றும் தகவல்களைக் கண்டறிவதற்கு ஆராய்ச்சி நிகழ்ச்சித்திட்டங்ளை ஆரம்பிக்கும் பொறுப்பு சிவில் சமூகத்திற்கு உண்டு. பன்மைத்துவ கலாசாரம் போன்ற ஒரு சமூகத்தின் இருப்பும் சீரமைப்புகளுக்கான கொள்கை வகுப்பாளர்களுக்கும் அமுலாக்குபவர்களுக்கும் அழுத்தத்தைக் கொடுப்பதற்கு தொடர்ச்சியாக நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| சமூக ஊடகம் என்பது ஒழுங்குறுத்த முடியாத வகையில் பரந்துபட்ட சவால் மிகுந்த ஒரு துறையாகும். எனினும் குறிப்பாக தேர்தல் காலங்களில், அரசியல் நிகழ்ச்சி நிரல்களுக்காக நானாவித இனத்துவ மற்றும் மதம்சார் பின்னணிகளுக்குரிய சமூகங்களின் கூருணர்வுகளை தூண்டிவிடும் வகையில் வன்முறைத் தீவிரவாத உணர்வுகளை விரிவாக்குவதற்கு அது பயன்படுத்தப்படுவது இன்னும் தீர்வு காணப்படாத சிக்கலாகும். | மூலம் தேசிய ஐக்கியத்திற்கு பங்கம் விளைவிக்கும் பகைமைப் பேச்சு பற்றி குறித்துறைக்கப்பட்ட ஒழுங்குறுத்தல் நடவடிக்கைகளை மேற்கொள்ள முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. | மேலும் இலங்கையின் பத்திரிகைப் பேரவையின் அதிகாரங்கள் "சுயாதீன ஊடக ஆணைக்குழு வரை விரிவாக்கப்பட வேண்டும். இதற்கு ஏற்புடைய அதிகாரிகள் உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். அதே சமயம் இலங்கையில் கருத்து வெளியிடும் சுதந்திரத்திற்கு பொறுப்பான ஊடகக் கலாசாரத்தை உறுதிப்படுத்துவதற்கான அதிகாரங்கள் வலுவாக்கம் செய்யக்கூடிய அதிகாரங்களை இத்தகைய சுயாதீன ஆணைக்குழுவிற்கு வழங்க வேண்டும்.<br><br>சமூகத்தில் கருத்துக்களை வெளியிடும் சுதந்திரத்திற்கான ஊடகமாக சமூக ஊடகங்கள் முக்கிய வகிபாகத்தை கொண்டிருந்தாலும், குறுகிய அரசியல் மற்றும் ஏனைய நிகழ்ச்சி நிரல்களுக்காக பல்வேறு இன மத பின்னணிகளிலிருந்து வரும் சமூகத்திடம் வன்முறைத் தீவிரவாத உணர்வுகள், பகைமைப் பேச்சுக்கள் மற்றும் வேறுவகையான பிரகடனங்களை வெளிப்படுத்துவதை ஒழுங்குறுத்துவதற்கான நடவடிக்கைகளை அதிகாரிகள் மேற்கொள்ள வேண்டும். | |

# 6. முடிவுகள்

மனிதர்கள் வன்முறைத் தீவிரவாத நிலைமைக்கு ஏன் ஆளாகின்றார்கள். அல்லது இலங்கைச் சமூகத்தைப் போலவே, உலக மட்டத்திலும் தீவிரவாத வன்முறை நிலவுவதற்கு அடிப்படைக் காரணமாக சுட்டிக் காட்டக் கூடிய எவ்வித திட்டவட்டமான காரணத்தையும் கூற முடியாது. எனினும் பல்கலைக்கழக மட்டத்தில் நிகழ்த்தப்பட்ட நேர்காணல் தொகுதியின் போது முன்வைக்கப்பட்ட கருத்துக்கள் மூலம், ஒரு தனிநபர் வன்முறைத் தீவிரவாதம் மீது தூண்டப்படுவதற்கு அல்லது மறுபுறம் ஈர்க்கத் தக்க பல காரணிகள் உண்டு.

சட்டரீதியான ஏனைய அடிப்படை உரிமைகளைப் போலவே சமத்துவத்திற்கு உள்ள உரிமை, சித்திரவதைக்கு உட்படுத்தப்படாமை பற்றிய உரிமை சுதந்திரமாக கருத்துக்களை வெளியிடும் உரிமை, மதங்களை வழிபடுவதற்கும் பேச்சுச் சுதந்திரத்திற்கும் உள்ள உரிமை, கூட்டங்களில் பங்குபற்றலுக்கான உரிமை, ஏனையோருடன் தொடர்பாடல் செய்வதற்கான உரிமை. தொழில் செய்வதற்கும் போக்குவரத்து செய்வதற்கும் உள்ள உரிமை, என்பன மூலம் சமூக ஒருங்கிணைப்பு, சகவாழ்வு மற்றும் பன்முகத் தன்மையில் காணப்படும் ஐக்கியம் என்பவற்றிற்கு வசதி அளிக்கப்பட்டுள்ளது. ஆனால், மேற்படி உரிமைகளை உரியபடி அனுபவிப்பதற்குத் தேவையான சமூகப் பின்னணியை ஸ்தாபிப்பதற்கும் மேற்படி உரிமைகளுக்கு உரிய அங்கீகாரத்தை வழங்குவதற்கு அவசியமான சுற்றாடலைக் கட்டியெழுப்புவது அவசியம். உரிய நடவடிக்கைகள் இல்லாமை, மனித வன்முறைத் தீவிரவாதத்திற்கு தூண்டுதல் அளிக்கக்கூடும். அதே சமயம் இது தொடர்பான துரித தீர்வுகளை வழங்கத் தாமதித்தால், பயங்கர விளைவுகளை ஏற்படுத்தக்கூடிய பல பிரச்சினைகளை எதிர்நோக்க வேண்டி வரும். இனம் சார்ந்த தேசியவாதம் மற்றும் மதத் தீவிரவாதம் பொதுவாக மக்களின், குறிப்பாக இளைஞர் யுவதிகளின் வன்முறைத் தீவிரவாதத்திற்கு தூண்டப்படலாம். பன்மைத்துவ சமூகத்தில் சமூக ஒருங்கிணைப்பும் சகவாழ்வையும் உறுதிப்படுத்துவதற்கு, சமூக ரீதியாகவும் அரசியல் ரீதியாகவும் தீர்மானகரமான வகிபாகம் மற்றும் அது தொடர்பான கூடிய பொறுப்புக்களின் அளவை வகிக்கும் அரசியல்வாதிகள், அரசியல் செயற்பாட்டாளர்கள், மதத் தலைவர்கள் ஜனரஞ்சகமான தனிநபர்கள் இது பற்றி உரிய கூருணர்வை மேம்படுத்துவதற்கும் வன்முறைத் தீவிரவாதத்தை சமூகத்தில் இருந்து வேருடன் களைவது கட்டாயமாகும்.

இலங்கை போன்ற பன்மைத்துவ கலாசார சமூகம் செயற்படும் ஒரு நாட்டில் பன்மைத்துவம், சமூக ஒருங்கிணைப்பு மற்றும் சகவாழ்விற்கு இடமளித்து, சமூக அரசியல் கலாசாரத்தை நோக்கி நீண்டகாலக் கண்ணோட்டத்தில் இளைஞர் சமூகத்தை வழிநடத்துவதற்கு நீண்டகால நடத்தை மாற்றத்திற்குரிய பயனுறுதிவாய்ந்த முயற்சிகள் தேவை. இதன் பொருட்டு ஒட்டுமொத்தமான கல்வி முறைமைக்கு ஏற்புடைய உபாயமார்க்க திட்டங்கள், தோல்வி கண்ட சந்தர்ப்பங்கள் சவால்கள் மற்றும் மாற்றமடையக்கூடிய இடங்கள் என்பன தொடர்பாக குறிப்பாக மீள மீட்டுப்பார்க்க வேண்டிய நிலைமை உள்ளது.

நவீன டிஜிட்டல் யுகத்தின் பாரிய சமூக கலாசாரம் பல்வேறு துரித மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளன. ஊடகத்தின் சம்பிரதாயபூர்வ சமூக உறவுகள் மற்றும் மானுட உறவுகள் உடையும் சூழமைவில், பிரதான நீரோட்டத்தைச் சார்ந்த ஊடகங்கள் மற்றும் சமூக ஊடகங்கள் தீர்மானகரமான வகிபாகத்தை நிறைவேற்றுகிறது. எனவே, தவறான எண்ணங்கள், தவறான தகவல்கள் என்பவற்றை பிரசாரம் செய்த வண்ணம் தீவிரவாத வன்முறைச் செயற்பாடுகளின் மீது மக்களைத் தூண்டுவதற்கு ஊடகங்களுக்குள்ள வாய்ப்பை தடை செய்து, மனித உறவுகளைத் தொடர்ச்சியாகப் பராமரிக்கக் கூடிய வகையில் உபாயமார்க்க ரீதியாக எண்ணக் கருக்களை உருவாக்குதல், திட்டமிடல் மற்றும் அவற்றை அமுலாக்குதல் அவசியமாகும். வன்முறைத் தீவிரவாதத்திற்கு காரணமான வகையில் தகவல்களை ஊடகங்கள் வாயிலாக விநியோகிப்பதை தடுப்பதற்கும், மிகப் பரந்துபட்ட ஊடகப் பயனாளிகளை இலக்கு வைத்து, நானாவித தேசிய மற்றும் மத அடையாளங்கள் உரித்தான பகுதியினர் பங்குபற்றக்கூடிய

வகையிலும், சமூக, கலாச்சார மற்றும் அரசியல் பிரச்சினைகள் தொடர்பாக பயனுறுதிவாய்ந்த கலந்துரையாடல்களை முன்னெடுப்பதற்கும் சம வாய்ப்புக்களை வழங்குவதை குறிக்கோளாகக் கொண்டும், அனைத்து ஊடகங்கள் மீதும் தாக்கம் செலுத்தக்கூடிய பொது நெறிமுறைத் தொகுதியொன்றை அமைப்பது பற்றி கவனம் செலுத்தப்பட வேண்டும். தேர்தல் காலங்களில் வெறுப்புணர்வை ஏற்படுத்தும் பிரகடனங்களை சமூக மயப்படுத்துதல் பொதுவாக அனைத்து ஊடகங்களும் குறிப்பாக சமூக ஊடகங்கள் எதுவித மட்டுப்பாடுமின்றி மேற்பார்வையின்றி செயற்படுகின்றன. இந்நடவடிக்கைகள் வன்முறைத் தீவிரவாத நிலைமைகளை ஏற்படுத்துவதற்கு தூண்டுதலாக அமைகிறது. இதனைத் தடுப்பதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும். என்பதை எதுவித விவாதத்திற்கும் இடமின்றி நாம் புரிந்துகொள்ள வேண்டும்.

அரசியலமைப்பிற்கான பதின்மூன்றாவது மற்றும் பதினாறாவது அரசியலமைப்புத் திருத்தங்கள் மூலம் குறிப்பிட்டுள்ளவாறு அரசியலமைப்பின் நான்காம் அத்தியாயத்தை உறுதிப்படுத்தியுள்ளவாறு சிங்களம் தமிழ் ஆகிய இரு மொழிகளும் அரச கரும மொழிகளாக அங்கீகரிக்கப்பட்டுள்ள பொழுதிலும் நடைமுறையில் அதனை அமுல்படுத்துவது முக்கியமாகும். மொழிப் பிரச்சினைக்கு இதன் காரணமாக சம வாய்ப்பு கிடைக்காமல் போயுள்ளது. தனிநபர்களின் முதலாம் மொழியை அடிப்படையாகக் கொண்டு இடம்பெறும் பல்வேறு தீவிரவாத நடவடிக்கைகள் மத்தியில், சிங்களம் மற்றும் தமிழ் ஆகிய இரு மொழிகள் அரச கரும மொழிகளாகவும் நிர்வாக மொழிகளாகவும் அரசியல் அமைப்பில் அங்கீகரிக்கப்பட்டுள்ளன. இந்த அடிப்படைக் காரணிகளை முன்வைத்து அவற்றை நடைமுறைப்படுத்துவது அத்தியாவசியம் ஆகும் பல்வேறு இனங்களும் மதப்பிரிவினரும் ஐக்கியமாக வாழும் அகிம்சை மூலம் இம்சையைப் புறக்கணித்து சமூக ஒருங்கிணைப்பையும் சகவாழ்வையும் கொண்ட ஒரு சமூகத்தை உருவாக்குவதற்கு முன்னுரிமை வழங்கப்பட வேண்டும்.

வன்முறைத் தீவிரவாதத்தைத் தடுப்பதாயின், சட்டரீதியாகவும், கொள்கை ரீதியாகவும், நிர்வாக ரீதியாகவும், மனப்பாங்கிலும் நடத்தையிலும் மாற்றங்களை ஏற்படுத்த வேண்டும். சிவில் மற்றும் அரசியல் நிலைமைகள், சுதந்திரம், சமூகப் பொருளாதார மற்றும் அரசியல் உரிமைகள் பற்றிய பிரச்சினைகளுக்கு தீர்வு வழங்கப்பட வேண்டும். அதே சமயம் இனத்துவத்தையும் மதத் தீவிரவாதத்தையும் அடிப்படையாகக் கொண்டு பொது சமூகம் மற்றும் குறிப்பாக இளைஞர் சமூகங்களுக்கிடையே பல்வேறு இனங்களிடையே காணப்படும் சந்தேகங்களை அகற்றுவதற்கு தெளிவான அரசியல் தொலைநோக்கை உருவாக்குவது அத்தியாவசியமாகும் என்பது இக் கலந்துரையாடல்களின் போது வலியுறுத்தப்பட்டது என இறுதியாகக் கூற வேண்டும்.

තොරතුරු දැනගැනීමේ අයිතිවාසිකම සම්බන්ධයෙන් ඔබට අවශ්‍ය ඕනෑම තොරතුරක් පිළිබඳව සහය වීමට අප සූදානම්!

ක්ෂණික ඇමතුම්

## තොරතුරු සහය මධ්‍යස්ථානය

**011-30 30 463**

(සතියේ දිනයන්හි පෙ.ව. 9.00 සිට ප.ව. 5.00 දක්වා)




தகவல் அறியும் உரிமை பற்றி உங்களுக்குத் தேவையான அனைத்து தகவல்கள் தொடர்பாகவும் ஒத்துழைப்பு வழங்குவதற்கு நாங்கள் தயார் !

உடனடித் தொடர்புகளுக்கு

## தகவலுக்கான உதவிப் பணியகம்

**011-30 30 463**

(வாரநாட்களில் மு.ப. 9.00 மணி தொடக்கம் பி.ப. 5.00 மணி வரை)

CPA
Centre for Policy Alternatives

ISBN : 978-624-5914-05-0